
சாண்டில்யன்
மங்கலதேவி
வானதி பதிப்பகம்

முதற் பதிப்பு : பிப்ரவரி 1979
பத்தாம் பதிப்பு : செப்டம்பர், 2005
பதினொறாம் பதிப்பு : ஏப்ரல், 2009
பன்னிரண்டாம் பதிப்பு : ஜூன், 2011
பதிமூன்றாம் பதிப்பு : நவம்பர், 2012

© உரிமை ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

**விலை : ரூ. 35.00**

| | |
|---|---|
| Title | : MANGALA DEVI |
| Author | : SANDILYAN |
| Language | : Tamil |
| Subject | : Historical Stories |
| Edition | : Thirteenth Edition, November, 2012 |
| Pages | : 84 |
| Published By | : VANATHI PATHIPPAKAM<br>23, Deenadayalu Street,<br>T.Nagar, Chennai-600 017.<br>Ph:24342810 / 24310769<br>e-mail: vanathipathippakam@gmail.com<br>website: www.vanathi.in |
| Price | : ₹ 35.00 |

Printed at : **MALAR PRINTERS,** Chennai, Ph.: 044-28224803

## முன்னுரை

**மங்கலதேவி, பழிவாங்கும் விழிகள், மஸ்தானி, கோழைச் சோழன்** ஆகிய நான்கு சரித்திரக் கதைகள் இந்த நூலில் இடம் பெறுகின்றன. இந்த நான்கும் சரித்திரப் பிரசித்தி பெற்றவை.

மங்கலாபுரத்தைப் பாண்டியனான கோச் சடையன் ரணதீரன் வெற்றி கொண்டு மகாரதர்களை வீழ்த்தித் தென்புறம் முழுவதையும் பாண்டிய ஆட்சிக்குள் கொண்டு வந்தானென்பதற்குத் திட்டமான ஆதாரங்கள் இருக்கின்றன. ஊடே ஒரு காதல் கதையைப் பிணைத்திருக்கிறேன் **'மங்கலதேவி'**யில்.

**'பழி வாங்கும் விழிகள்'** பல்லவர் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டது, மயூர வர்மனைப் புரவி வீரன் அடித்துத் தள்ளியதும், அதனால் அவன் வேத பாடத்தை உதறி வாளேந்தியதும், கதம்பகுல அரசை நிறுவியதும் சரித்திரத்தின் மகோன்னத சம்பவம்.

**மஸ்தானி**– பேஷ்வா பாஜிராவின் காதலைப் பற்றிச் சரித்திர ஆசிரியர்கள் பலர் எழுதியிருக்கிறார்கள். இதில் உண்மைச் சரித்திரமே கதை போல இருக்கிறது. இதற்குப் பல ஆசிரியர்கள் தங்கள் கற்பனைக்குத் தக்கபடி கதை வடிவம் கொடுத்திருக்கிறார்கள். நானும் எனக்குத் தோன்றிய முறையில் எழுதியிருக்கிறேன்.

**'கோழைச் சோழன்'** சங்க காலச் சரித்திரம். அதில் கண்ட சம்பவங்கள் அனைத்தும் அப்படியே நடந்தவை. கோழைச் சோழன் மூலமாக ஒரு வீர

சரித்திரத்தை இந்தக் கதையில் படிக்கிறீர்கள். இதில் வரும் பாத்திரங்கள் அனைவரும் சங்க நூல்களில் இருக்கிறார்கள். சில உரையாடல்கள், சம்பவங்களைப் பற்றிய 'ஜிகினா' வேலைகள், இவைதான் என் கற்பனை.

இந்த நான்கு கதைகளையும் மகிழ்ச்சியுடன் தமிழ் மக்கள் முன்பு சமர்ப்பிக்கிறேன். இதில் நாம் பாண்டிய நாட்டில் துவங்கி, பல்லவ நாடு சென்று, மகராஷ்டிரத்தில் சுழன்று, சோழ நாட்டுக்கு வருகிறோம். இப்படித் தென்னாட்டுப் பூப்பிர தட்சிணம் செய்வதோடு சரித்திரப் பெரு வீரர்களை யும் சந்திக்கிறோம்.

இக் கதைகளை நீங்கள் பெரிதும் ரசிப்பீர் களென்று நினைக்கிறேன். வழக்கமான உங்கள் ஆதரவு இந்த நூலுக்கும் இருக்குமென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

இந்த நான்கு கதைகளில் 'மங்கலதேவி'யும் 'கோழைச் சோழ'னும் சிறந்த இலக்கிய மாதப் பத்திரிகையான 'அமுதசுரபி'யிலும், 'பழி வாங்கும் விழி'களும், 'மஸ்தானி'யும் முறையே 'அலிபாபா,' 'குங்குமம்' ஆகிய சிறந்த வாரப் பத்திரிகைகளின் முதல் இதழ்களிலும் வெளி வந்திருக்கின்றன.

இக் கதைகளைப் பிரசுரித்து ஆதரித்த அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், ஒன்றிலே நான்கையும் இப்புத்தக மூலம் தந்துதவிய வானதி அதிபர் திருநாவுக்கரசு அவர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

—சாண்டில்யன்

# மங்கலதேவி

## 1

**தா**மிரபரணி தவழ்ந்து வருவதாலும் தமிழ் செய்த தவசி அகத்தியர் ஒரு காலத்தில் வாழ்ந்த தாலும் இயற்கை வளமும் இயற்கைச் சிறப்பும் பெற்ற பொதியமலை, தனக்குச் சரித்திரச் சிறப்பும் கிடைக்க வேண்டுமென்ற அவாவினால், தனது அடர்ந்த காடுகளுக்குள்ளிருந்த புலிகளை விட்டுப் பயங்கர மாக அலறச் செய்து கொண்டிருந்தது. புலிகளின் அலறலுக்குப் பயந்து, காட்டு மரங்களுக்கிடையில் பாய்ந்து சென்ற மான் முதலிய சாத்விக மிருகங் களின் கால்கள் பாவுவதால் சலசலத்த மரச் சருகு களின் ஓசை, அந்த மிருகங்களிடம் பரிதாபம் காட்டியதோ என்னவோ- ரகுவீரன் காதுகளுக்கு அவை கர்ணகடூரமாகவே இருந்தன. புரவி மீது ஏறி மலைப்பகுதியில் செல்லாமல் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு புரவியோடு தானும் நடந்து சென்ற வாலிபனான ரகுவீரன் முகத்தில் ஏதோ ஒரு விவரிக்க இயலாக் கடுப்பு இருந்து கொண் டிருந்தது. 'பாண்டிய மன்னன் இரத்தவெறி இன்னும் போகவில்லை போலிருக்கிறது. போர் முடிந்ததும் தலைநகர் திரும்பாமல் இந்த மலைக் காட்டுச் சாரலில் கூடாரங்களை அடித்துத் தங்கு

வானேன்? என்னைத்தான் மதுரையிலிருந்து அவசர அவசரமாக அழைப்பானேன்? அப்படி என்ன தலை போகிற காரியம்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்ளவும் செய்தான். அப்படிக் கேட்டுக் கொண்ட சமயத்தில் அவன் அழகிய முகத்தின் வீர இதழ்கள் சிறிது கடுப்புடன் மடியவும் செய்தன. "எப்படியிருந்தாலும் நாளை மதுரை திரும்பிவிட வேண்டும். என் தந்தையின் கண்டிப்பான உத்தரவு இருக்கிறது. ஆகையால் பயப்படாதே," என்று தனது புரவிக்கு ஆறுதல் சொல்லிச் செல்லமாக அதன் முதுகில் தட்டுத் தட்டினான். தட்டிய வேகத்தில் அவன் இடைக் கச்சையிலிருந்த நீண்ட வாளின் உறை ஒரு முறை புரவியின் வயிற்றில் உராயவே, புரவி அவனை நோக்கித் திரும்பி ஒரு முறை கனைத்தது. பற்களைக் காட்டிச் சிரிக்கவும் செய்தது- 'மதுரைக்குத் திரும்புவது உன்னையும் என்னையும் பொறுத்ததல்ல' என்று உணர்த்துவது போல.

"உன் திமிர் வரவர அதிகமாகிக் கொண்டு வருகிறது," என்று ரகுவீரன் குதிரையுடன் வாய் விட்டே பேசினான். இப்படி எத்தனையோ முறை அவன் அதனுடன் பேசியிருக்கிறான். பேசிய ஒவ்வொரு சமயமும் அவன்தான் தோற்றிருக்கிறானே தவிர, குதிரையின் ஜோசியம் ஒரு நாளும் பொய்த்ததில்லை. ஆகையால், தீவிர சிந்தனையோடு பொதியமலை மீது ஏறிச் சென்றான் ரகுவீரன். இப்படி சுமார் நான்கு நாழிகை, பயணம் செய்த பிறகு தூரத்தே இருந்த படைகளின் அரவமும் பெரும் பந்தங்களின் வெளிச்சத்தின் வீச்சும் கண்ணுக்குத் தெரியவே, சேர வேண்டிய இடத்தை அடைந்து விட்டோமென்று குதூகலத்



தில் புரவி மீது தாவி ஏறி அதைச் சற்று வேகமாகவே செலுத்தினான். அந்த ஜாதிப் புரவியும் மலையின் மேடுகளைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் முகத்தைத் தாழ்த்தியும் நிமிர்த்தியும் அலட்சிய நடை போட்டு ஏறிச் சென்றது. அடுத்த அரை நாழிகையில் படைத் தளத்தின் முகப்பை அடைந்து விட்ட ரகுவீரன் புரவியை தளத்தின் ஊடே செலுத்தினான். தளத்தின் முகப்பிலிருந்த இரு வீரர்கள் அவனை வேல் கொண்டு தடுத்தாலும், பந்தத்தைத் தாங்கியவன் அவன் முகத்தைப் பார்த்ததும் தலை தாழ்த்தி, "தாங்களா! மன்னிக்க வேண்டும்," என்று அச்சத்துடன் தலைவணங்கி, "செல்லுங்கள், தளத்தின் நடுவிலிருக்கும் கூடாரத்தில் மன்னர் தங்கியிருக்கிறார்" என்று கூற, இரு வீரரும் விலகி நின்றனர். இதற்குமேல் தடங்கல் ஏதுமில்லாமல் பாண்டிய மன்னன் கூடாரத்தை அடைந்த ரகுவீரன் ஆகாயத்தைப் பார்த்து, "நடுநிசி ஆகிவிட்டது. மன்னரை அனாவசியமாக எழுப்ப வேண்டா" என்று வாயிலிலிருந்த காவலரிடம் கூறிவிட்டுத் திரும்ப முயன்றவனை, "மன்னர் உறங்கவில்லை. உள்ளே வரலாம்" என்ற குரல் சட்டென்று நிறுத்தியது. மிகவும் பழகிய குரல் அது. அதைக் கேட்பதிலேயே வீரர்கள் மகிழ்ச்சி கொள்ளும் அந்தக் குரலுக்குடையவன் அடுத்த இரண்டு விநாடிகளில் கூடாரத்து வாயிலில் காட்சியளித்தான். அவனைப் பார்த்தவுடன் புரவியிலிருந்து கீழே குதித்த ரகுவீரன், "மன்னர் மன்னனுக்கு வணக்கம்" என்று கூறி, உறங்க வேண்டிய சமயத்திலும் மன்னன் இடையில் தொங்கி கொண்டிருந்த வாளை உற்று நோக்கினான்.

தன் ஆட்சிக் காலமான முப்பது ஆண்டுகளையும் போர்ப் பாசறைகளிலேயே கழித்து விட்டவனும் சில தினங்களுக்கு முன்பே பொதியமலை மன்னனான ஆய்வேளை மருதூரில் முறியடித்து விட்டவனுமான பாண்டியன் கோச்சடையன் ரணதீரன், மிக்க சம்பீரமாக அந்த நடுநிசியில் வாயிலில் நின்றான். அவன் வதனத்தில் போரை முடித்த பெருமிதமும் இல்லை. இனி ஓய்வு பெற வேண்டும் என்ற எண்ணச் சாயையும் இல்லை. "ரகுவீரா! உள்ளே வா போகலாம்." என்றான் ரணதீரன் புன்முறுவல் செய்த வண்ணம்.

ரகுவீரன் முகத்தில் பழைய கடுப்பு அதிகமாயிற்றே யொழிய புன்முறுவல் சிறிதும் வரவில்லை. அந்தக் கடுத்த முகத்துடன் மன்னனைப் பின் தொடர்ந்து கூடாரத்துக்குள் நுழைந்தான். நுழைந்ததும் கூடாரத்தை ஒருமுறை சுற்றிலும் நோக்கினான். மன்னனுக்கான படாடோபங்கள், வசதிகள் எதுவுமே உள்ளே இல்லை. மன்னன் படுக்க ஒரு கயிற்றுக் கட்டில் ஓர் ஓரத்தில் இருந்தது. அதன் மீது புலித்தோல் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. ஒரு சாதாரணத் தலையணை கட்டிலின் தலைப்பகுதியில் கிடந்தது. ஒரு மூலையில் ஒரு சிறு மதுக்குவளை சிறிய ஆசனத்தின் மீது இருந்தது. அரசன் உடைகள் குறுக்கே கட்டப்பட்ட ஒரு சணற்கொடியில் தொங்கிக் கொண்டிருந்தன. மற்றபடி விசேஷமாக ஆயுதங்களே இருந்தன மன்னன் பாசறைக் கூடாரத்தில்.

ரகுவீரன் கண்கள் சென்ற இடங்களை ரணதீரன் கவனித்ததன் விளைவாக மெல்லச் சிரிக்கவே செய்தான். மன்னன் சிரிப்பொலி கேட்ட பின்பே தன் சுய நிலையை அடைந்த ரகுவீரன், "மன்னர்



நகைக்கும்படி நான் ஏதும் செய்யவில்லையே," என்றான்.

"உன் பார்வை கூடாரத்தைச் சுற்றியதைக் கண்டேன்," என்றான் பாண்டியன் ரணதீரன், மேலும் சற்றுப் பலமாகவே சிரித்து.

"அது தவறா?"

"இல்லை, உனக்கு ஏமாற்றம்!"

"எதில்?"

"மன்னன் பாசறையில் பஞ்சணைகள் வேண்டும். பொற் கிண்ணங்கள் வேண்டும். மதுவை எடுத்துக் கொடுக்கப் பணிப்பெண்கள் வேண்டும். எதுவுமில்லாமல் வெறும் கயிற்றுக் கட்டிலையும் கொடியையும் பார்க்கிறாய் பாவம்! நீ நினைக்கும் மன்னவன் இன்று பாண்டிய நாட்டில் இல்லை," என்று கோச்சடையன் மீண்டும் நகைத்தான்.

"மன்னவா!" ரகுவீரன் குரலில் ஆத்திரமிருந்தது.

"ஆத்திரப்படாதே ரகுவீரா! நான் சொன்னதெல்லாம் படுத்துத் தூங்கும் மன்னனுக்குத் தேவை. போரிடும் மன்னனுக்குத் தேவையானது எளிய வாழ்க்கை. அதுவும் கடுமையான வாழ்க்கை; வேண்டிய வசதியெல்லாம் மதுக்கலங்களல்ல. போர்க் கலங்கள்" என்று ரணதீரன் குறிப்பிட்டுவிட்டுச் சிறிது கூடாரத்துக்குள் உலாவினான். அவன் உலாவ ஆரம்பித்தது விஷயத்தை விளக்குவதற்கு முதற்படி என்பதை உணர்ந்த ரகுவீரன், மௌனமாகவே நின்று கொண்டிருந்தான்.

ரணதீரன் திடீரென்று உலாவுவதை நிறுத்தித் திரும்பி, "ரகுவீரா! உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?" என்று வினவினான் புதிர் போடுபவன் போல்.

"மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்" என்றான் ரகுவீரன்.

"இல்லை" என்றான் மன்னன்.

"தாங்கள் மன்னர். நான் தங்கள் படையைச் சேர்ந்த சாதாரண வீரன். தவிர ஆய்வேளுடன் நடந்த போரிலும் ஈடுபடாமல் மதுரையில் தங்கி விட்டவன்."

"உன்னை மதுரையில் தங்கச் செய்தது நான்," என்றான் மன்னன்.

"ஆம்."

"ஆகையால் போரில் ஈடுபடாதது உன் தவறல்ல."

இதற்கு ரகுவீரன் பதில் கூறவில்லை. மன்னனே மேலும் சொன்னான், "நம்மிருவருக்கும் அதிக வித்தியாசமில்லை," என்று.

"மன்னவா..." என்று ஏதோ சொல்ல முயன்ற வனைக் கையசைப்பினாலே அடக்கிய பாண்டிய மன்னன், ரகுவீரனை அணுகி அவன் தோளில் ஒரு கையை வைத்து, "உனக்கும் எனக்கும் இரண்டு எழுத்துகள்தாம் வித்தியாசம்" என்றான், அன்பு ஒலித்த குரலில்.

மன்னன் சொல்வது புரிந்தாலும் புரியாததுபோல் நடித்த ரகுவீரன், "மன்னன் சொல்வது விளங்க வில்லை," என்றான்.

"நான் ரணதீரன், நீ ரகுவீரன். இரண்டு எழுத்து கள்தாம் வித்தியாசம். உன்னைவிட எனக்கு வயது அதிகம். ஆனால் ரகுவீரா! உன் வயதிலேயே நான் பெரும் போர்களில் இறங்கிவிட்டேன். இல்லாவிட் டால் பாண்டிய நாடு இத்தனை விரிந்திருக்காது," என்று கூறிய மன்னன், "ரகுவீரா! இது பேரரசாகத் தென்திசை முழுவதையும் அரசாள ஒரே ஒரு தடை இருக்கிறது," என்றும் சொன்னான்.



இதைச் சொன்ன கோச்சடையன் இரண்டடி திரும்பி நடந்து கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு தீவிர யோசனையில் இறங்கினான். பிறகு தலை நிமிர்ந்து எதிரே நின்ற ரகுவீரனை நோக்கி, "அந்தத் தடையை நீக்கத்தான் உன்னை அழைத் தேன்" என்றான் சிந்தனையும் ஆவலும் இணைந்து ஒலித்த குரலில்.

"என்னை அழைத்தீர்களா! பாண்டிய நாட்டை விரிவடையச் செய்யவா?"- வியப்புத் தாங்காததால் பிரமித்த குரலில் கேட்டான் ரகுவீரன்.

"இருவர்தாம் அதைச் சாதிக்க முடியும். ஒன்று நீ! இன்னொருவன் நான்! நான் இப்பொழுது பகிரங்கமாகக் கிளம்புவதற்கில்லை. ஆகையால் நீதான் போக வேண்டும்," என்றான் ரணதீரன் தீர்மானத்துடன்.

ரகுவீரன் உடனடியாக அதற்குப் பதில் சொல்ல வில்லை. தீவிர சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான், "நமக்கு இப்பொழுது தடையாயிருப்பது எது?" என்று.

"கொங்கு நாடு. அது வசப்பட்டு விட்டால் தென் திசை முழுவதும் பாண்டிய சாம்ராஜ்யம் நிறுவப் பட்ட தாகும்," என்றான் ரணதீரன்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த ரணவீரன், "அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினான்.

"மங்கலாபுரம் செல்ல வேண்டும்," என்றான் ரணதீரன்.

"சென்று?"

"ஒரு தந்திரசாலியைத் தந்திரத்தால் வளைக்க வேண்டும்."

"யாரது?"

"மங்கலதேவி."

"ஆம்."

'ரகுவீரன் முகத்தில் சினம் ஏறியது. "பெண்ணை வளைக்கத்தான் நான் தகுதி என்று நினைக்கிறீர்களா?" என்று சீற்றம் குரலில் மிதமிஞ்சி ஒலிக்கக் கேட்கவும் செய்தான்.

# 2

பல போர்களைக் கண்டவனும், செங்கோல் தென்னன், செம்பிய வானவன், மதுர கருநாடகன் என்ற விருதுகளைப் பெற்றவனும் எதற்கும் அஞ்சாத நெஞ்சுரமுள்ளவனும் கலக்கம் என்பதை அணுவளவும் அறியாதவனுமான ரணதீரன், தனது எதிரே நின்ற ரகுவீரனை அந்தச் சமயத்தில் சிறிது கலக்கத்துடனேயே பார்த்தான். 'பெண்ணை வளைக்கத்தான் நான் தகுதியா?' என்று கேட்ட அந்த வாலிபனின் சினம் நியாயமானதென்றே மன்னனுக்குப் பட்டதால், அவன் சில விநாடிகள் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தான். பிறகு சமாளித்துக் கொண்டு ரகுவீரனை நோக்கிப் புன்முறுவல் செய்து, "ரகுவீரா! ஆயிரம் படைகளை வளைத்துவிடலாம். ஒரு பெண்ணை வளைப்பது சுலபமல்ல," என்று பதிலும் சொன்னான். "அது மட்டுமன்று, மங்கலதேவியைப் பெண்ணென்று சொல்வது சரி அன்று," என்று விளக்கினான் மெதுவாக.



மன்னனின் விளக்கம் வீரன் சினத்தைச் சற்று அதிகப்படுத்தவே, "அப்படியானால் அவள் ஆணா?" என்று வினவினான்.

"பிறப்பில் பெண்தான்..." என்று இழுத்தான் மன்னவன்.

"செயலில்?"

"பல ஆண்களுக்குச் சமானமானவள். சென்ற எட்டு ஆண்டுகளாக அவள்தான் மங்கலபுரக் கோட்டையைப் பாதுகாத்து வருகிறாள்!"

"ஏன்?"

"அவள் தந்தை பிரதாபருத்திரன் நோய்வாய்ப் பட்டுக் கிடக்கிறான்."

"ஆம் . . ."

"கோட்டையைக் காக்க வேறு படைத் தலைவர் இல்லையா?"

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை ரணதீரன். ஏதோ யோசனையில் இறங்கினான் பல விநாடிகள். கடைசியாகப் பேசியபோது அவன் குரலில் அதிகத் திடமுமில்லை. சந்தேகத்தின் ஒலி இருந்தது. "கொங்குநாட்டு அரசன் அதற்கு வேறு தலைவனை நியமிக்காததிலிருந்து இந்தப் பெண்ணின் சக்தியில், போர்ப் பயிற்சியில், திறனில், அவனுக்கு அதிக நம்பிக்கை இருக்க வேண்டும். நான் அறிந்த வரையில் சென்ற எட்டு ஆண்டுகளில் கோட்டை மிகவும் பலப்பட்டிருக்கிறது," என்று சொன்னான் ரணதீரன் சிறிது தயக்கத்துடன்.

பாண்டிய மன்னன் பேச்சும், பேச்சில் தொனித்த சந்தேக ஒலியும் அந்த வாலிப வீரனுக்குப் பெரு வியப்பைத் தரவே, "நீங்கள் சொல்வதைப் பார்த்

தால் இந்தப் பெண் பெரிய அல்லி ராணியாயிருக்க வேண்டும்," என்று கூறியதன்றி மந்தகாசமும் செய்தான்.

"அல்லிராணி ஆண்களை அருகே அனுமதித்த தில்லை. இவள் தினம் நான்கு மகாரதர்களுடன் வாள் பயிற்சி, விற்பயிற்சி செய்கிறாளாம். ஒவ்வொரு முறையும் மகாரதர் தோற்றதாகத்தான் வதந்தி உலாவுகிறது," என்றான் ரணதீரன்.

ரகுவீரன் முகத்திலும் சந்தேகச் சாயை படர்ந்தது. "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இவள் ராட்சஸியாகயிருப்பாள் போல் தெரிகிறது," என்றான்.

"அப்படித்தான் தோன்றுகிறது" என்ற மன்னன், "ரகுவீரா! ஒன்று கேள்விப்படுகிறேன். மங்கலாபுரக் கோட்டை மலைச்சரிவிலிருக்கிறதாம். கோட்டைக் குள்ளிருப்பவர்களை வெற்றி கொள்வது அசாத்திய மாம். கோட்டையை அணுகக்கூட முடியாதாம். ஆகையால் கோட்டையை விட்டு மங்கலதேவியின் படையை வெளியில் இழுத்தாலொழிய அதை நாம் வெற்றி கொள்ள முடியாது. ஆகையால் படையை வெளியே இழுக்க வேண்டுமானால் மங்கலதேவியை கோட்டைக்கு வெளியே இழுக்க வேண்டும். வேறு வழியில்லை," என்று கூறினான்.

"அந்தப் பணி என்னுடையதாகும்?"- ரகுவீரன் குரலில் இகழ்ச்சி நிரம்பி நின்றது.

"ஆம், ஆனால் இகழ்ச்சிக்கு அதில் இடமில்லை. மங்கலதேவி தந்திரத்திலும் போரிலும் நூறு வீரர்களுக்கு இணையானவள். இந்த முயற்சியில் நீ உயிரை இழந்தாலும் இழக்கலாம்," என்றான் பாண்டிய மன்னன்.



மன்னன் என்ன சொல்லியும் ஒரு பெண்ணை வஞ்சிக்கச் செல்ல, வீரனான ரகுவீரன் மனம் ஒப்ப வில்லை. ஆகவே முகத்தில் கசப்பையே காட்டி னான். மன்னன் அதைக் கவனிக்காதது போலவே சொன்னான்: "ரகுவீரா, நாம் நினைப்பதுபோல கொங்கர் கோன் இந்தப் பெண்ணை நினைக்க வில்லை. அவன் கோட்டையைக் காக்கப் போதிய படைத்தலைவர்கள் இல்லாமலும் இல்லை. ஆனால் இவளைவிடச் சிறந்தவர் கிடையாதென்று கொங்கு மன்னன் நினைக்கிறான்," என்றும் மன்னன் சுட்டிக் காட்டி, "ரகுவீரா! இங்கிருந்து மலைவழியே மங்கல புரம் செல். நான் உன் பின்னால் சிறிது தள்ளியே படைகளை நடத்தி வருகிறேன். நீ அங்கு சென்ற பத்தாவது நாள் கோட்டைக்கு எதிரில் என் படை நிற்கும். அதற்குள் நிலைமையைச் சரிகட்டி விடு," என்று உத்தரவிட்டான்.

அதிகார தோரணையில் அரசனால் சொல்லப் பட்ட அந்த வார்த்தைகளைக் கேட்டதும், அது முடிவான உத்தரவென்பதைப் புரிந்து கொண்ட ரகுவீரன், "வருகிறேன் மன்னவா" என்று விடை பெற்றுக் கொண்டான்.

"ஏன்? நாளைக் காலையில் புறப்பட்டேன்," என்றான் ரணதீரன்.

"ஒரு நள்ளிரவு நிலையை மாற்றிவிடப் போவ தில்லை. பெண் வேட்டைக்கு இரவே நல்லது," என்று சலிப்புடன் கூறிவிட்டுக் கிளம்பினான் ரகுவீரன்.

பொதிய மலையிலிருந்து கிளம்பிய அந்தப் பாண்டிய நாட்டு வீரன், ஒரு பெண்ணை ஏமாற்ற வேண்டிய பணியில் மன்னன் தன்னை இறக்கி

விட்டானே என்ற மனத்தாங்கலுடன், மலை வழியிலே இரண்டு நாள் பயணம் செய்தான்.

இடையே இரண்டு நாட்கள் சேர நாட்டுக் கடற்கரை மூலமாகப் புரவியை நடத்தி, மீண்டும் மேற்குத் தொடர்ச்சி மலைமீது ஏறிக் காட்டுப் பாதையில் பயணத்தை நடத்தினான். சுமார் ஒரு வாரப் பயணத்துக்குப் பிறகு மங்கலபுரத்தின் எல்லைக் காட்டை அடைந்ததும் மலைச் சரிவில் தெரிந்த பிரும்மாண்டமான கோட்டையைக் கவனித்தான். பார்த்த அளவிலேயே அதை வெற்றி கொள்வது குதிரைக் கொம்புதான் என்பதை உணர்ந்து கொண்டான்.

மலைத் தொடரின் பெரும் சரிவின் உச்சியில் திடீரென சாய்ந்துவிடும் போல் நின்று கொண்டிருந்த மங்கலபுரக் கோட்டைக்கு மூன்று கதவுகள் இருப்பதையும், எதிரேயிருந்த அரபிக்கடலை நோக்கிக் கொண்டிருந்த பெரும் கதவின் வலு எந்தத் தாக்குதலையும் தாங்கவல்ல தென்பதையும் புரிந்து கொண்டான் ரகுவீரன். இதை ஒரு பெண் நிர்வகிக்கிறாளென்பதை நினைக்கவே பெரு வியப்பாயிருந்தது அந்த வாலிப வீரனுக்கு. ஆகவே அந்தக் கோட்டையின் அழகைக் கண்கொட்டாது பார்த்துக் கொண்டு அசைவற்றுப் புரவியில் அமர்ந்து கொண்டிருந்தான் பல நிமிடங்கள். பிறகு கீழே இறங்கிப் புரவிக்கருகில் நின்று கொண்டான்.

அப்பொழுது காலை நேரம். கதிரவன் உதித்து நான்கு நாழிகைகளே ஆகியிருந்ததால் கடலும் மலையும் சேர்ந்த காட்சி கண்ணைப் பறித்தது. அவன் நின்றிருந்த தோப்பில் பழந்தரும் தருக்கள் காற்றில் கிளைகளைத் தாக்கி, அவன் உண்ணக் கனிகளைத் தங்கள் கிளைக் கரங்களால் நீட்டின.



அவை எதையும் அவன் தொடவில்லை. கோட்டையே அவன் கவனத்தைக் கவர்ந்திருந்தது. அந்தப் பிரமிப்பிலிருந்து அவனை இழுக்கக் குரலொன்று ஒலித்தது, "நீங்கள் இந்த ஊருக்குப் புதிதா?" என்று.

குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினான் ரகுவீரன். அங்கு ஒரு பருவப் பெண்- கைக் கெட்டிய மாங்கனிகளைப் பறித்துத் தனது மடியில் போட்டுக் கொண்டிருந்தாள். இன்னொரு கை மற்றொரு கனியைப் பறிக்க இருந்தது. ஆனால் பறிக்காமல் நின்று விட்டது, அந்த வாலிபனைப் பார்த்த காரணத்தால். அவளைக் கண்ட ரகுவீரன், பிரமித்துப் போனான். அவளுக்கு இருபது இருபத்திரண்டு வயதுக்கு மேலிராது என்று தீர்மானித்தான். அவளைச் சுற்றிலும் மாங்கனிகள் தாழ்ந்த மரக்கிளைகளில் தொங்கின. கொடிகளில் பூங்கொத்துகள் தொங்கின. மரத்திலிருந்த பழங்களைப் பார்க்கவில்லை ரகுவீரன்- வேறு கனிகள் கண்ணைக் கவர்ந்ததால்! மலர்களைப் பார்க்கவில்லை பாண்டிய நாட்டு வீரன்- இரு அரவிந்தங்கள் அவனை உற்று நோக்கிய காணத்தால்! அது மட்டுமா? சற்று எட்ட இருந்த கொடியிலிருந்த முல்லைகளும் மலர்ந்து கிடந்தன. அதை ஏன் அவன் பார்க்க வேண்டும்? அவள் உதடுகள் விரிந்து அவற்றுக்குள்ளிருந்த முல்லைகள் மலர்ந்திருக்கும் போது!

இப்படிப் பார்த்து மயங்கி நின்ற ரகுவீரனைப் பார்த்த அந்தப் பெண் சிரித்தாள் மீண்டும்.

"ஏன் சிரிக்கிறாய்..." ஆத்திரத்துடன் கேட்டான் ரகுவீரன்.

"உங்கள் ஊரில் கோட்டை கிடையாதா?" என்று அவள் கேட்டாள்.

"நிறைய இருக்கின்றன."

"பெண்கள்?"

"இருக்கிறார்கள்."

"அப்படியிருக்க இரண்டையும் பார்த்து ஏன் மலைத்து நிற்கிறீர்கள்?" என்று கேட்ட அவள் கலகல வென நகைத்தாள்.

"கோட்டை பலமாயிருந்தது..." என்றான் ரகுவீரன்.

"பெண்?" அவள் கேட்டாள்.

"அழகாயிருக்கிறாள்!"- எரிச்சலுடன் பதில் சொன்னான் ரகுவீரன்.

அதற்கு அவள் கோபிக்கவில்லை. "உங்கள் பெயர் என்ன?" என்று மட்டும் கேட்டாள்,

"ரகு" என்று பாதிப் பெயரை மட்டும் சொன் னாள். அத்துடன் கேட்டான், "நீ யார்?" என்று.

"கோட்டையில் ஒரு பணிப்பெண்," என்றாள் அவள்.

"கோட்டைக்குள் விடுவார்களா என்னை?"

"யாரையும் விடுவார்கள்... நண்பர்களாயிருந் தால்."

"நண்பர் என்பதை எப்படி நிரூபிப்பது?"

"அது கொஞ்சம் கஷ்டந்தான். சரி; நீங்கள் இங்கு எதற்கு வந்தீர்கள்?"

"வேலை தேடி வந்தேன். அத்துடன் இந்தக் கோட்டையின் தலைவியையும் பார்க்க வந்தேன்."

"மங்கலதேவியையா?"



"ஆம்."

"எதற்கு?"

"அவர்கள் போரில் மிகவும் தேர்ச்சி பெற்றவர் களாம். பெண்ணுக்கு அப்படி என்ன தேர்ச்சி இருக்க முடியும் என்று பார்க்கலாமென்று ஆசை," என்றான் ரகுவீரன்.

"அப்படியானால் என்னுடன் வாருங்கள்," என்று அந்தப் பெண் அவனை அழைத்துச் சென்றாள் கோட்டையை நோக்கி. கோட்டையின் பிரதான வாசல் வழியாக நுழையாமல் பணியாளர் செல்லும் திட்டி வாசல் வழியாக அழைத்துப் போனாள். கோட்டைக் குள்ளிருந்த மூன்று மதில்களைத் தாண்டியதும் நடுவிலிருந்த பெரிய அரண்மனை யைச் சுட்டிக் காட்டி, "அதுதான் மங்கலதேவியின் அரண்மனை. போய் நீங்கள் வந்திருக்கும் கார ணத்தை அங்குள்ள ஸ்தானிகரிடம் சொல்லுங்கள்," என்று கூறிவிட்டுப் பக்கத்து இல்லமொன்றில் புகுந்துவிட்டாள் அந்தப் பணிப்பெண்.

"அந்தப் பணிப்பெண்ணைப் பற்றிய யோசனை யுடன் ஸ்தானிகரை அணுகிய ரகுவீரன், தான் வேலை தேடி வந்திருப்பதாகவும், தேவியைப் பார்க்க வேண்டுமென்றும் கூறினான். ஸ்தானிகர் அவனை நீராடி உணவருந்துமாறும், தேவியிடம் அறிவித்து விட்டு அவள் இஷ்டப்பட்டால் அழைத்துச் செல்வ தாகவும் கூறி, ரகுவீரனை உபசரிக்க ஒரு வீரனையும் ஏவினார். ரகுவீரன் அந்த அரண்மனையின் பக்கத்து இல்லத்தில் தங்க வைக்கப்பட்டான். அவனுக்கும் அவன் புரவிக்கும் உபசாரம் பலமாக நடந்தது.

அன்று பதினாறு நாழிகைக்கு மேல் ரகுவீரன் மங்கலதேவியின் சன்னிதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான். மாளிகையின் ஆஸ்தான மண்டபத்தின் நடுவில் பெரும் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தாள் மங்கலதேவி. அவள் தலையின் குழலை வைர மாலையொன்று வளைத்துக் கிடந்தது. வேலினும் கூரிய கண்கள் அவன் நெஞ்சை ஊடுருவிப் பார்த்தன. இதழ்களில் ஓர் இகழ்ச்சி இருந்தது. "உங்களுக்கு வேலை தேவையா?" என்ற அவள் கேள்வியிலும் இகழ்ச்சி ஒலித்தது.

பதில் சொல்ல மாட்டாமல் வாயடைத்து நின்றான் ரகுவீரன். தான் காலையில் பார்த்த பணிப்பெண்தான் மங்கலதேவியென்று அவனால் நம்ப முடியவில்லை. அவன் நிலை பெரும் சங்கடத்திலிருந்தது. அவள் அவனிடமிருந்து பதில் எதையும் எதிர்பார்க்கவில்லை. தனது ஆசனத்திலிருந்து எழுந்து ஒரு சாளரத்தண்டை சென்றாள். அவனையும் வரும்படி சைகை செய்தாள். கனவில் நடப்பவன் போல் நடந்து சென்ற ரகுவீரன் அருகே வந்ததும் சாளரத்தின் அருகிலிருந்த ஒரு வில்லை எடுத்துக் கொள்ளும்படி அவனுக்கு உத்தரவிட்ட மங்கலதேவி, ஓர் அம்பையும் அவன் கையில் கொடுத்து சாளரத்தின் வெளியே தூரத்திலிருந்த ஒரு மாமரத்தைச் சுட்டிக்காட்டி, "அதிலுள்ள ஒரு பழத்தை அம்பால் அறுத்துத் தள்ளுங்கள்," என்று உத்தரவிட்டாள்.

அந்தப் பரீட்சை எதற்கு என்று தெரியாது போனாலும், ரகுவீரன் வில்லை எடுத்து, அம்பை ஏற்றி, நாணை இழுத்து அம்பை விடுத்தான். 'விர்' ரென்று சென்ற அம்பு மாங்குலையிலிருந்து ஒரு



கனியை அறுக்கவே, மாங்கனி மேலே பறந்து வெகு தூரத்தில் போய் விழுந்தது.

"நன்று நன்று," என்று ஆர்ப்பரித்தாள் மங்கலதேவி. பிறகு வில்லைத் தான் வாங்கிக் கொண்டு மூன்று அம்புகளை எடுத்துக் கண்ணிமைக்கும் நேரத்தில் மூன்று அம்புகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அதே மாங்குலையைப் பார்த்து எய்தாள், மூன்று மாங்கனிகள் மந்திரத்தால் கொய்யப் பட்டவை போல் மூன்று திக்குகளில் சிதறிச் சென்றன. அந்தக் கைவண்ணத்தைப் பார்த்துத் திகைத்த ரகுவீரனைப் பார்த்து நகைத்த மங்கலதேவி, 'உங்களை என் படையில் சேர்த்துக் கொண்டு விட்டேன்," என்றாள்.

"என்னை உங்களுக்கு முன்பே தெரியாதே," என்றான் ரகுவீரன்.

"தெரியும்," என்றாள் மங்கலதேவி.

"யார்?" என்று கேட்டான் ரகுவீரன்.

"ரணதீரனின் ஒற்றன்," என்று அறிவித்தாள் மங்கலதேவி.

## 3

**அ**திர்ச்சி என்ற சொல்லுக்கு ஓர் உருவம் சமைக்க முடியுமானால், அந்த உருவமாக விளங்கினான் ரகுவீரன், மங்கலதேவியின் பதிலைக் கேட்ட மாத்திரத்தில். இருப்பினும் அந்த அதிர்ச்சியை அடக்கிக் கொண்டு அவளைக் கேட்டான், "அப்படியானால் என் பெயரும் உங்களுக்குத்

தெரிந்திருக்கும்" என்று, குரலில் சிறிது போல் ஏளனத்தை ஒலிக்க விட்டு.

மங்கலதேவி தன் விஷமம் சொட்டும் அதிகாரக் கண்களை அந்த வாலிபன்மீது பதியவிட்டாள் சில விநாடிகள். பிறகு சொன்னாள்: வயது வந்த பெண்கள் வாலிபர்களின் பெயரை உச்சரிப்பது தவறு தான். இருந்தாலும் சில சமயங்களில் பெண்களின் பலவீனம் தனது சுபாவத்தைக் காட்டுகிறது; பெயரின் அழகில்கூட மயங்குகிறது. ரகுவீரன் என்ற பெயர் அழகான பெயரல்லவா?"

இதைக் கேட்டதும் ரகுவீரன் பிரமை முன்னை விடப் பன்மடங்கு உயர்ந்தது. "அப்படியானால் என்னைப் பற்றிச் சகலமும் தெரியும் என்று சொல்லுங்கள்," என்றான் ரகுவீரன்.

"எது தெரிந்தாலும் நீங்கள் ஒற்றனாக வந்திருக்கிறீர்களே தவிர, வேவு பார்க்கும் உத்தேசம் உங்களுக்கில்லை என்பது எனக்குத் தெரியும்?" என்றாள் மங்கலதேவி.

"வேறெதற்கு வந்திருக்கிறேன்?"- ரகுவீரன் குரலில் பிரமை மிதமிஞ்சிக் கிடந்தது.

"அந்தக் காவிய ரகுவீரன் எதற்கு வந்தான் மிதிலைக்கு?" என்று கேட்டு முறுவல் செய்தாள் மங்கலதேவி.

"என்ன சொல்கிறீர்கள் தேவி?"

"அந்த ரகுவீரன் மிதிலைக்கு வில்லை உடைக்க வந்தான்."

"ஆம்."

"நீங்கள் இங்கு கோட்டையை உடைக்க வந்திருக்கிறீர்கள். வில்லையாவது ஒரு பெண்ணுக்குப் பணயமாக வைத்திருந்தார்கள். ஆனால் இங்கு கோட்டை பணயமில்லையே, உடைத்தால் பெண்ணும் கிடைக்க மாட்டாளே," என்று கூறிய மங்கலதேவி, "பாண்டிய வீரரே! இதைப் பாரும்," என்று மடியிலிருந்த ஓர் ஓலையைக் கொடுத்தாள்.



அதைப் பிரித்துப் படித்த ரகுவீரன் இதயம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. "ரகுவீரன் என்ற படைவீரன் பாண்டியன் உத்தரவுக்கிணங்கி இரகசியமாக மதுரையிலிருந்து பொதிய மலைக்குப் புறப்பட்டு விட்டான்" என்று ஓலையில் கண்டிருந்தது. அதை இருமுறை படித்து ஓலையைத் திருப்பிக் கொடுத்த ரகுவீரன், "எங்கும் ஒற்றர்களை வைத்திருக்கிறீர்கள்," என்று சொன்னான் வறண்ட உணர்ச்சியற்ற குரலில்.

"பாண்டிய மன்னன் சோழனையும், சேரனையும், மலைமன்னனான ஆய்வேளையும் வெற்றி கொண்ட பிறகு, தென் திசை ஆதிக்கத்துக்கு அவனுக்குக் குறுக்கே நிற்பது கொங்கு நாடு. அதன் வாயில் மங்கலாபுரம். இது கைவசப்பட்டால் கொங்கு விழுந்தது போலத்தான். ஆகவே பாண்டிய மன்னர் கண்ணோட்டம் இங்குதானிருக்குமென்று சொன்னார் என் தந்தை. அப்படிப் பாண்டிய மன்னர் வந்தால் அவரை எதிர்கொள்ளத் தயாரானோம். ஆகவே அவரது அசைவு ஒவ்வொன்றையும் கவனிக்க வேண்டியதாயிற்று," என்று அறிவித்த மங்கலதேவி, "வாருங்கள் கோட்டையைச் சுற்றிப் பார்ப்போம்," என்றாள்.

கனவில் நடப்பவன் போல் ரகுவீரன் அவளைத் தொடர்ந்தான். கோட்டை முழுவதையும் மங்கலதேவி அவனுக்குச் சுற்றிக் காட்டினாள். மதில்கள் மீதிருந்த வேலெறியும் பொறிகளையும்

வில்லவரை யும் காட்டினாள். பலமான கதவுகளையும் காட்டி னாள். அவ்விருவரும் கோட்டையைச் சுற்றி வருவ தற்குள் இரவு நெருங்கிவிட்டது. மாளிகை திரும்பி மங்கலதேவி அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்து, "இனி உங்கள் இருப்பிடம் செல்லலாம்" என்று கூறிக் கைதட்டி இரு காவலரை அழைத் தாள். அதன் காரணத்தை உணர்ந்த ரகுவீரன் காவலரைப் பின்பற்றிச் சென்றான்.

மங்கலதேவியிருந்த அரண்மனைக்குப் பக்கத்து மாளிகையிலேயே ரகுவீரன் தங்க வைக்கப்பட்டான். அடுத்த இரண்டு மூன்று நாட்கள் எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை கோட்டையில் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் செல்லவும் எதை வேண்டுமானாலும் பார்க்கவும் அவன் அனுமதிக்கப்பட்டான். இத்தனையிருந்தும், தான் சுதந்திர புருஷன் அல்ல னென்பதை ரகுவீரன் சந்தேகமற உணர்ந்து கொண்டான் செல்லுமிடங்களிலெல்லாம் யாராவது ஒரு வீரன் அவனைத் தொடர்ந்து, "இந்த இடம் இப்படி, இங்கேதான் ஆயுதக்கூடம்; கோட்டை மீது ஏற இது வழி" என்று எல்லாவற்றையும் காட்டுவதுபோல் பாசாங்கு செய்தாலும், அவன் உண்மையில் தன்னைக் காவல் புரிய ஏவப்பட்டவன் எனபதை ரகுவீரன் உணரவே செய்தான். மற்றபடி அவனுக்கு மாளிகையில் ராஜ மரியாதை அளிக்கப்பட்டது.

மூன்றாவது நாள் மங்கலதேவியிடமிருந்து அவனுக்குத் திடீரென அழைப்பு வந்தது. அவனை மாளிகையில் சந்தித்த வீரன், "கோட்டைத் தலைவி அழைத்து வரச் சொன்னார்கள். வேட்டைக்குப் போகிறார்கள், காட்டுப் பகுதிக்கு," என்றான்.



ரகுவீரனுக்கு இது பெரும் புதுமையாயிருந்தது. எதிரி ஒற்றனை வேட்டைக்கு அழைக்கும் பழக்கம் கிடையாதாகையால், "நான் ஆயுதம் தரித்து வரலாமா?" என்று விசாரித்தான்.

"பூரண ஆயுதம் தரித்துவர உத்தரவு. இதையும் கொடுக்கச் சொன்னார்கள்," என்று கையிலிருந்த வில்லையும் அம்பறாத் தூணியையும் நீட்டினான் அந்த வீரன்.

ரகுவீரன் பதிலேதும் சொல்லாமல் உடை அணிந்தான். கத்தியை இடையில் கட்டினான். வில்லையும் அம்பறாத் தூணியையும் தோளில் மாட்டிக் கொண்டு வாயிலுக்கு வந்தான். அங்கு அவன் புரவியை இரு வீரர்கள் பிடித்துக் கொண்டு நிற்கவே அதன் மீது தாவி ஏறி, "தேவி எங்கிருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

"கோட்டைக்கு வெளியே," என்றான் முதலில் வந்த வீரன்.

புரவியை வேகமாகச் செலுத்திக் கோட்டையின் பிரதான வாயில் வழியாக வெளியே வந்த ரகுவீரன், மலைச்சரிவில் காட்டு முகப்பில் மங்கலதேவி தன் புரவியில் சாய்ந்து எதிரே அலைமோதிக் கொண்டிருந்த கடலைப் பார்த்தவண்ணம் நின்றிருப்பதைக் கண்டு, சட்டென்று புரவியை நிறுத்தி அவளைக் கண் கொட்டாமல் நோக்கினான்.

காலை வேளையில் மங்கலதேவி புரவிமீது ஒரு கையைப் போட்டுக் கொண்டு கடலை நோக்கி நின்ற காட்சி, அவனை அப்படியே மயக்கத்திற்குள்ளாக்கியது. அவள் கூரிய விழிகளிலிருந்து வீரசக்தி, நுதலைத் தடவிய இரு தலைக்குழல்

பிரிவுகள், சிறுத்த இடை, நிமிர்ந்த மார்பு இத்தனை யையும் பார்த்துப் பார்த்து மலைத்தான் ரகுவீரன்.

அவன் பார்வையையும் மலைப்பையும் அவள் கவனிக்கவும் செய்தாள். அதைப்பற்றி அவள் லட்சியம் செய்தாகத் தெரியவில்லை; புரவி மீது ஏறி அவளைத் தொடரும்படி சைகை செய்து, காட்டுக்குள் வெகு வேகமாய் புரவியைச் செலுத்தி னாள். உள்ளே செல்லச் செல்ல காடு மிகுந்த அடர்த்தியாயிற்று. சட்டென்று புரவியை நிறுத்தி இறங்கிய மங்கலதேவி, ரகுவீரனிடமிருந்த வில்லை வாங்கிக் கொண்டாள். அவனைச் சற்று பின்னடை யும்படி செய்து, காட்டின் அடர்ந்த பெரும் புதரொன்றைக் கவனித்தாள். அதிலிருந்து பெரும் உறுமல் ஒன்று கேட்கவே, வில்லை வளைத்து வாளியொன்றை அந்தப் புதரை நோக்கிப் பறக்க விட்டாள். அடுத்த விநாடி பயங்கர இரைச்சலுடன் பெரும் புலியொன்று புதரிலிருந்து பாய்ந்த வேகத்தில் கீழே விழுந்தது. ரகுவீரன் குறுவாள் அதன் கழுத்தில் ஆழப்பதிந்து கிடந்தது.

அவன் குறுவாளை எடுத்ததையும் மங்கலதேவி பார்க்கவில்லை. வீசியதையும் பார்க்கவில்லை. எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்தது. ஆகவே அவனை நன்றிக் கண்களுடன் நோக்கி னாள். ஆனால் ரகுவீரன் அவளை இரண்டு எட் டில் அணுகி **இறுக அணைத்தான்**. "பயப்படாதே தேவி," என்று தைரியமும் சொன்னான்.

மங்கலதேவியின் நிலை விவரிக்க இயலாதிருந்தது. சட்டென்று சீற்றத்துடன் அவனைத் தள்ளினாள், தன்னிடமிருந்து. "இந்தப் புலி இரண்டு நாட்களாகக் கோட்டையைச் சுற்றுகிறது. மேய்ச்சலுக்கு வரும்



ஆடுகளையும் மாடுகளையும் அடித்து விடுகிற தென்று சொன்னார்கள். அதைக் கொன்றதற்கு நன்றி," எனக் கூறிவிட்டுப் புரவி ஏறி வேகமாகச் சென்று விட்டாள் மங்கலதேவி, கோட்டையை நோக்கி. மங்கலதேவி புலியைக் கண்டு பயந்திருப்பா ளென்று அச்சப்பட்ட தன் முட்டாள் தனத்தை நினைத்து ரகுவீரனும் தன்னை நொந்து கொண்டு கோட்டைக்குச் சென்றான். ஆனால் மாளிகையை அடைந்த பின்பும் அவன் மனம் ஒரு நிலையில் இல்லை. மங்கலதேவியை அணைத்த இன்பத்தை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தான். அடுத்த மூன்று நாட்கள் மங்கலதேவி அவனைப் பார்க்க வில்லை. நான்காவது நாள் கோட்டையில் பரபரப்பு அதிகமா யிருந்தது. அதைக் கண்ட ரகுவீரன் காரணத்தை உணரவே செய்தான். அந்த உணர்வை வலுப்படுத்த ஒரு செய்தியும் வந்தது அவனுக்கு. மங்கலதேவியிட மிருந்தன்று, பிரதாபருத்திரனிடமிருந்து வந்தது.

நோய்வாய்ப்பட்டு மிக பலவீனமான நிலையி லிருந்த பிரதாபருத்திரன் தீனமான குரலில் சொன் னான், "பாண்டிய வீரரே! என் உயிர் இன்னும் இரண்டு நாட்கள் தாம் உடலில் நிற்கும். இந்த தறுவாயில் நீங்கள் ஒரு வரம் தரவேண்டும்," என்று.

ரகுவீரன் அவரைப் பரிதாபமாகப் பார்த்தான். "சொல்லுங்கள்" என்றான்.

"செய்வதாகச் சத்தியம் செய்யுங்கள்- வாள் மீது," என்றார் பிரதாபருத்திரன்.

மரணப் படுக்கையிலிருப்பவன் கோரிக்கையை மறுக்காதிருக்க, அவன் கேட்டபடி ஆணையிட் டான் ரகுவீரன். பிறகு, "என்ன செய்ய வேண்டும்," என்று வினவினான்.

"என் மகளை நீ மணக்க வேண்டும், இந்தக் கோட்டையைக் காக்க வேண்டும்," என்று பிரதாப ருத்திரன் சொன்னான்.

"இரண்டையும் நான் எதற்காகச் செய்ய வேண்டும்?" என்று எரிச்சலுடன் அனுதாபமும் கலந்த குரலில் கேட்டான் ரகுவீரன்.

"என் மகள் மீது இதுவரை யார் கையும் பட்டது கிடையாது. நீ அவளை அணைத்ததாக அவள் சொன்னாள். ஆகையால் அவளை மணக்கும் கடமையிருக்கிறது உனக்கு. மணந்தபின் அவள் கடமையை நீ ஏற்பதும் தர்மசாஸ்திரம்," என்றான் பிரதாபருத்திரன்.

ரகுவீரன் பதிலேதும் சொல்லவில்லை, சிறு விநாடிகள். "இந்தக் கோட்டை ரணதீரன் தாக்கு தலைச் சமாளிக்க முடியுமா?" என்று வினவினான் முடிவில்.

பதிலுக்கு பிரதாபருத்திரன், "உன் மனைவியைக் கேள்," என்றான். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. தலையணையில் சாய்ந்து விட்டான்.

# 4

மயக்கமுற்றுச் சாய்ந்து விட்ட மங்கலபுரத் தலைவனை, மேலும் கஷ்டப்படுத்த இஷ்டப்படாமல் தனது இருப்பிடம் சேர்ந்த ரகுவீரன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்து போராடிக் கொண்டிருந்ததால், அவன் அன்று இரவு முழுவதும் உறங்கவில்லை. பிரதாபருத்திரன் கோரிக்கைகள் அவனுக்கு மிக விசித்திரமாயிருந்தன. திடீரென வேவு பார்க்க வந்தவனை, பெண்ணை மணக்கும்



படியும் கோட்டைக் காவலை ஏற்கும்படியும் பிரதாபருத்திரன் ஏன் கேட்டார் என்பது விளங்கவில்லை அந்த வாலிப வீரனுக்கு. ஆனால் மங்கலதேவியின் இணையிலா அழகை, அணைப்பு அளித்த இன்பத்தை நினைத்த போது, உள்ளே எழுந்த கேள்விகள் எங்கோ பறந்து சென்றன. பிரதாபருத்திரன் புத்தியைப் போல் மயங்காவிட்டாலும் தனது புத்தியும் வேறு விதத்தில் மயங்கிக் கிடப்பதை உணர்ந்து கொண்டான் ரகுவீரன். 'உணர்ச்சி வேகத்தில் மங்கலதேவியை அணைத்து விட்டாலும் அணைத்தது தவறுதானே," என்று தன்னைக் கேட்டுக் கொண்டான். அணைத்த பின்பு வீரன் கடமை, பெண்ணை அனாதரவாக விட்டுச் செல்வதன்று என்றும் அவனுக்குப் புரிந்திருந்தால் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அன்றிரவு முழுவதும் இப்படி மயங்கிய நிலையிலிருந்த ரகுவீரன், மறுநாள் காலை ஒரு முடிவுக்கு வந்தான். வந்ததும் நீராடி புத்துடையணிந்து மங்கலதேவியைப் பார்க்கச் சென்றான்.

மங்கலதேவி அவனை பழையபடி ஆஸ்தான மண்டபத்திலேயே சந்தித்தாளானாலும் ஆசனத்தில் அமரவில்லை. தலையை நிலத்தில் தாழ்த்திய வண்ணம் நின்று கொண்டிருந்தாள். பேச்சை அவள் துவக்காததால் ரகுவீரனே துவக்கினான், "தங்கள் தந்தை எனக்கு இரண்டு கட்டளைகள் இட்டிருக்கிறார்," என்று.

"தெரியும்" என்பதை தேவி வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் தலையை மட்டும் அசைத்தாள்.

"உங்களை மணக்க வேண்டுமென்பது ஒரு கட்டளை," என்று திடமாகவே சொன்னான் ரகுவீரன்.

அதற்கும் பதிலில்லை அவளிடமிருந்து. இம்முறை தலையசைப்பும் இல்லை. ரகுவீரனே சொன்னான், "கோட்டையைக் காக்க வேண்டுமென்பது இரண் டாவது கட்டளை," என்று.

அவள் மெல்லத் தன் கண்களை உயர்த்தி அவனை நோக்கினாள். "என்ன செய்ய உத்தேசம்?" என்று வினவவும் செய்தாள் திடமான குரலில்.

"முதல் கட்டளை உன் விருப்பப்படி நடக்கும். இரண்டாவது கட்டளையை நிறைவேற்றுவது என் கடமையாகிறது," என்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறினான் ரகுவீரன்.

"அப்படியானால் கோட்டையைக் காக்கப் போகிறீர்கள்?" என்று வினவினாள் மங்கலதேவி.

"ஆம். ஒரு பெண்ணை அவள் இஷ்டவிரோத மாகத் தீண்டியது தவறு. அவளை வஞ்சித்துக் கோட்டையை எதிரியிடம் ஒப்படைக்க வந்தது அதை விடத் தவறு. இரண்டுக்கும் வீரனுக்குள்ள ஒரே பிராயச்சித்தத்தை நிறைவேற்றத் தீர்மானித்து விட்டேன்."

"அப்படியானால் உங்கள் மன்னனுக்கு விரோதமாகத் திரும்பப் போகிறீர்களா?"

"இல்லை."

"கோட்டையைப் பாதுகாத்து- உங்கள் மன்னனுக் கும் துரோகம் செய்யாதிருக்க எப்படி முடியும்? இரண்டும் நேர்முரண்பாடான விஷயமாயிற்றே?

"அறிவு எந்தச் சிக்கலையும் அவிழ்க்கும்" என்ற ரகுவீரன், "இன்று பகல் இந்தக் கோட்டையின் மூன்று வாயில்களையும் காவல்புரியும் மகாரதர் களைக் கூட்டுங்கள். என்னைப் படைத்தலைவனாக



அறிமுகம் செய்யுங்கள்," என்றும் சொல்லிவிட்டுச் சென்ற வேகத்தை பார்த்த மங்கலதேவி புன்முறுவல் செய்தாள்.

அன்று பிற்பகலில் மந்திராலோசனைக் கூட்டத் தில் மகாரதர்களுக்கு ரகுவீரனை தேவி அறிமுகப் படுத்தினாள். "படைத்தலைவர்களே! இதோ இருக் கும் ரகுவீரனை என் தந்தை இந்தக் கோட்டைத் தலைவராக நியமித்திருக்கிறார். ஆகவே இன்று முதல் நீங்கள் இவர் சொல்படி நடக்க வேண்டும்," என்று சுருக்கமாக விஷயத்தைத் தெரிவித்தாள்.

மகாரதர்கள் வாயைப் பிளந்தார்கள். ரகுவீரனை அவர்கள் மூன்று நாட்களாகப் பார்த்துக் கொண்டு தானிருந்தார்கள். அவன் பாண்டிய ஒற்றனென் பதும் அவர்களுக்குத் தலைவனாகிறான் என்பதைக் கேட்டதும் படைத்தலைவர்கள் வியப்பும் திகைப்பும் அடைந்தார்கள். "இவரை எப்படி நாம் நம்ப முடியும்?" என்றும் ஒரு படைத்தலைவன் வின வினான்.

ரகுவீரன் மங்கலதேவிக்கு அருகில் போடப் பட்டிருந்த தனது ஆசனத்திலிருந்து எழுந்து மகார தர்களை உற்று நோக்கினான். பிறகு சொன்னான்: "பிரதாபருத்திரர் மரணத் தருவாயிலிருக்கிறார், அவருக்கு என் வாளின்மீது ஆணையிட்டு வாக்குக் கொடுத்திருக்கிறேன்," என்று.

"அனுதாபத்தாலா?" -வினாவினான் இன்னொரு படைத்தலைவன்.

"அல்ல. அனுதாபத்தை மரணப் படுக்கையி லிருந்தாலும் எந்த வீரனும் விரும்ப மாட்டான்," என்றான் ரகுவீரன்.

"வேறு என்ன காரமம்? என்று கேட்டான் இன்னொருவன்.

"காரணம் என்பதைவிடக் கடமை என்ற சொல் பொருந்தும்," என்று சொல்லித் தனது பார்வையை மங்கலதேவியின் பக்கம் ஒரு முறை திருப்பிய ரகுவீரன், "இத்துடன் கேள்விகள் நிற்கட்டும்; செயலில் இறங்குவோம். இன்று பகல் நாம் கோட்டைப் பாதுகாப்பையும், படைப்பிரிவுகளை யும் பார்வையிடுவோம்," என்று கூறி அவர்களுக்குப் போக விடை கொடுத்தான்.

அவர்கள் சென்றதும் தனித்து விடப்பட்ட மங்கலதேவியும் ரகுவீரனும் ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டு நின்றார்கள் நீண்ட நேரம். கடைசியாக மங்கலதேவியே அவனை அணுகி, "உங்கள் பெயரை நாசம் செய்து கொள்ளாதீர்கள். போய்விடுங்கள் இக்கோட்டையை விட்டு," என்றாள் மெதுவாக. அவள் கண்களில் விவரிக்க இயலாத துன்பம் மேலோங்கி நின்றது.

"அதற்குரிய சமயம் போய்விட்டது மங்கலதேவி," என்றான் தீனமான குரலில்.

"ஏன்?" மங்கலதேவியின் குரல் அவன் குரலை விடப் பலவீனமாயிருந்தது.

ரகுவீரன் அவள் தோள்களைப் பற்றினான் இரு கைகளாலும், "நான் இங்கு வந்ததே தவறு. உன்னைக் கண்டது அதைவிடத் தவறு. கண்டபின் உலகை மறந்து உணர்ச்சிக்கு இடங் கொடுத்தது அதைவிடத் தவறு. எல்லாவற்றுக்கும் மேலாக..." சொற்களை முடிக்கவில்லை ரகுவீரன்.

"எல்லாவற்றுக்கும் மேலாக..." மிக மெதுவாகக் கேட்டாள் மங்கலதேவி.



"உன்னிடம் மனத்தைப் பறிகொடுத்ததும் பெரும் தவறு," என்றான் வாலிபன்.

"தவறா?" என்றாள் யுவதி.

இருவர் கண்களும் சந்தித்தன. இருவரும் பேச வில்லை. ஒருவரையொருவர் புரிந்து கொண்ட காரணத்தால், அன்றைக்குப் பிறகு மங்கலதேவியை ரகுவீரன் பார்க்கவில்லை. படைகளைப் பார்வை யிடுவதிலும், அணி வகுப்பதிலும் காலங்கழித்தான். அவன் அங்கு வந்த தினத்திலிருந்து சரியாக எட்டா வது நாள் ரணதீரனின் பெரும் படை மங்கலபுரத்து மலைச் சரிவில் அணி வகுத்து நின்றது.

பாண்டிய மன்னன் பெரும் படையை எதிர்க்க ரகுவீரனும் சித்தமானான். போர் தொடுப்பதற்கு முதல் நாளிரவு வந்த பாண்டிய தூதனை, மங்கலதேவியுடன் ரகுவீரனே சந்தித்தான் ஆஸ்தான மண்டபத்தில்.

பாண்டிய தூதன், மங்கலதேவிக்கு பக்கத்தில் சரி சமானமாக அமர்ந்திருந்த ரகுவீரனைக் கண்டதும் முகத்தில் ஒரு விநாடி வியப்பைக் காட்டினாலும் அதைச் சட்டென்று மறைத்துக் கொண்டு, தூதுச் செய்தியைச் சொன்னான். "பாண்டிய பூபதி, செங் கோல்தென்னவன், செம்பியன், மதுர கருநாடகன் கோட்டைய உடனடியாகத் தன்னிடம் ஒப்படைத்து வீணான படைச் சேதத்தைத் தவிர்க்கும்படி மங்கலதேவிக்கு உத்தரவிடுகிறார். இல்லையேல் நாளைக்கே கடும்போர் தொடங்கப்படும் என்று அறிவிக்கிறார். அது தவிர, அவரது ஒற்றரும், சிறந்த வீரருமான ரகுவீரனை என்னுடன் அனுப்பி வைக்குமாறு கட்டளையிடுகிறார். வாழி பாண்டிய மன்னன்," என்று அறிவித்தான் தூதன் திடமான குரலில்.

இதற்கு பதில் சொல்ல வாயைத் திறந்த மங்கலதேவியை கை சைகையால் அடக்கிய ரகுவீரன் தூதனை நோக்கி, "தூதுவனே ரகுவீரனை ஒற்றனாக நினைத்தது தவறு என்று பாண்டிய மன்னனிடம் சொல். மங்கலாபுரக் கோட்டையை ரகுவீரன் காக்கும் வரையில் அதை வசப்படுத்துவது பத்துப் பாண்டிய மன்னர்கள் வந்தாலும் முடியாதென்று சொல். கோட்டைத் தலைவன் ரகுவீரன் நாளைக் காலையில் பாண்டியர் படைகளைக் கோட்டைக்கு வெளியே சந்திப்பதாகச் சொல்," என்றான் வீரம் ததும்பும் குரலில்.

தூதுவனுக்கு வியப்பு அதிகமானதால் புன் முறுவல் மட்டும் செய்தான். "ரகுவீரருக்கு உயிரின் மேல் ஆசையில்லை போலிருக்கிறது?" என்றும் சொன்னான்.

"உயிரைவிட உயர்ந்த விஷயங்கள் உலகத்தி லிருக்கின்றன," என்றான் ரகுவீரன்.

"என்னவோ?"

"மானம், கடமை" என்ற ரகுவீரன், "இதையும் பாண்டிய மன்னரிடம் சொல். என்னை இங்கு அனுப்பு முன்பு அவர் பொதிய மலையிலிருந்து அனுப்பிய ஓலையையும் நான் பார்த்ததாகச் சொல் மன்னன் கையெழுத்து நான் அறியாததன்று என்றும் சொல்," என்று கூறித் தூதன் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையைக் காட்டினான். இந்தத் தூதை அப்படியே போய்ச் சொன்னான் பாண்டிய மன்னனிடம் தூதன். அதைக் கேட்ட ரணதீரனின் முகத்தில் பெரும் திருப்தி உலாவியது.

மறுநாள் காலை கோட்டைக் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்த கொங்கு நாட்டு



படைகளின் முன்னிலையில் மகாரதர்களுக்கும் முன்பாக ரகுவீரன் வாளை உயர்த்திக் கொண்டு புரவியில் வெகு வேகமாக மலைச் சரிவில் வந்தான். படைகள் கை கலந்தன. கடுமையான போர் மூண்டது. ஒரு பகுதியிலிருந்து மலைக் காட்டுக் கருகே புரவியில் நின்று போரிட சன்னத்தமாயிருந்த ரணதீரனை வெகுவேகமாக நெருங்கினான் ரகுவீரன்.

மலைச்சரிவில் போர் மிகக் கடுமையாக நடந்தது. மகாரதர்களில் மூவர் படுகாயமுற்றனர். பாண்டியப் படையும் அதிகச் சேதப்பட்டுக் கொண்டிருந்தது. ரகுவீரன் தேவியின் படையை அணிவகுத்திருந்த காரணத்தால், சேதத்தை அதற்கு மேல் போகவிட இஷ்டப்படாத ரணதீரன், தன் புரவியை ரகு வீரனை நோக்கிச் செலுத்தி வாளையும் பாய்ச்ச ஓங்கினான். இருவர் வாள்களும் பயங்கரமான ஒலி யுடன் உராய்ந்தன.

# 5

மங்கலபுரத்தில் மலைச்சரிவில் காட்டுப் பகுதி யின் ஓரத்தில் புரவி மீதிருந்து கொண்டே போரிட்ட மதுரை மன்னனையும் ரகுவீரனையும் சுற்றிலும் எட்டவும் கடுமையான போர் நடந்து கொண்டிருந் தாலும் அந்த இருவரும் அனைத்தையும் மறந்து ஒருவரையொருவர் மும்முரமாகத் தாக்கிப் போரிட் டார்கள். இருவர் புரவிகளும் சுழன்றன, இடித்தன, தாக்கின. மேலிருந்த வீரர்களின் இச்சைப்படி வீரர் இருவரும் கத்திகளை மாறி மாறி வீசியும் குறுக்கே பாய்ச்சியும் போரிட்டனர். அப்படிப் பொருத்திக்

கொண்டிருந்த சமயத்தில் மற்ற இடங்களில் மங்கலபுர மகாரதர்கள் வீழ்ந்துவிட்டதால் கோட்டைப் படைகள் சிறிது பின்வாங்க ஆரம்பித்தன. பல போர்களில் கலந்து கொண்டதால் சாணை பிடிக்கப்பட்ட கத்தியைப் போலிருந்த கோச்சடையன் படை, எதிரிகளை வளைத்து அழிக்க முயன்று கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் யாரோ ஒருவன் பயங்கரக் கூச்சலிட்டதால், காட்டுப் பக்கமிருந்த மன்னன் படை சட்டென்று போரை நிறுத்தியது. தன் புரவி மீது எங்கிருந்தோ வந்த ஒரு வேல் பாய்ந்துவிட்டதால் தரையில் குதித்தான் ரணதீரன்.

புரவியிலிருந்த ரகுவீரனும் புரவியை விட்டுத் தரையில் குதித்து மன்னனுடன் போரில் இறங்கினான். இருவர் வாட்களும் பயங்கரமாக மீண்டும் மீண்டும் இணைந்தன. உராய்ந்தன, கணீர் கணீரென சப்தித்தன. ரணதீரன் வயதில் பெரியவனானாலும் வாலிபனான ரகுவீரன் மிக அநாயாசமாகச் சமாளித்தான். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ரகுவீரன் வாள் சரேலென அவன் கையிலிருந்து பறந்துவிட, ரணதீரன் வாள் அவனை நோக்கி இறங்க முற்பட்டது. அந்தச் சமயத்தில், "மன்னவா! கை அப்படியே நிற்கட்டும்" என்று சற்று எட்ட இருந்த மரத்தின் மறைவிலிருந்து மங்கலதேவியின் குரல் ஒலித்தது.

அதைக்கேட்ட மன்னன் சிறிது தயங்கினான். "என் அம்பு உங்கள் மார்புக்குக் குறி வைக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் சிறிது அசைந்தாலும் பாண்டிய நாடு மன்னனை இழந்துவிடும். உங்கள் சாம்ராஜ்யமும் கனவாகிவிடும்," என்று மங்கலதேவி மீண்டும் எச்சரித்தாள்.



அச்சமென்பதை ஆயுளில் அறியாத, மரணத்தை எப்பொழுதும் வரவேற்கும் குணமுள்ள ரணதீரன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. அவன் வாள் உயர்ந்து ஒரு முறை அசைந்தது. பிறகு உறையில் சென்று நுழைந்தது! கணை தொடுத்த வில்லுடன் மங்கலதேவி காட்டின் மறைவிலிருந்து வெளிவந்தாள்: வியப்புடன் போர்க்களத்தை நோக்கினாள். எங்கும் போர் சட்டென்று நின்றிருந்தது. ரணதீரன் வாளின் ஓர் அசைவுக்கு இருந்த சக்தியை நினைத்து வியந்த மங்கலதேவி, வில்லையும் வாளையும் மன்னன் பாதங்களில் வைத்துவிட்டு, ரகுவீரன் பக்கத்தில் நின்று கொண்டாள், "எங்களிருவரையும் சேர்த்தே சிறை செய்யுங்கள்," என்று வேண்டிக் கொண்டாள்.

கோச்சடையன் கண்கள் சிரித்தன. "தேவி! இவனுடன் நீ சேராதே. இவன் உன்னைக் காட்டிக் கொடுத்தவன்," என்றான், ரகுவீரனைச் சுட்டிக் காட்டி.

"அதற்கு என்ன தண்டனை?" என்று கேட்டாள் மங்கலதேவி.

"இன்னும் தீர்மானிக்கவில்லை."

"உங்கள் தண்டனையைத் தீர்மானித்துக் கொண்டீர்களா?"

"எனக்கு எதற்கு தண்டனை?"

"அவரை என்னிடம் காட்டிக் கொடுத்ததற்கு, அவர் வரப்போவதாக எனக்குக் கிடைத்த ஓலை நீங்கள் எழுதியது," என்று மங்கலதேவி மிக இகழ்ச்சியுடன் ரணதீரனைப் பார்த்தாள்.

பாண்டிய மன்னன் விழிகள் வியப்பால் மலர்ந்தன. "இது இவனுக்கும் தெரியுமா?" என்று ரகுவீரனைச் சுட்டிக்காட்டிக் கேட்டான்.

"உங்கள் கையெழுத்து எனக்கே தெரியும்போது, உங்கள் அந்தரங்க வீரருக்கா தெரியாமல் போகும்," என்று வினவினாள் மங்கலதேவி. அத்துடன் மேலும் சொன்னாள்: "மன்னவா! மனோதத்துவம் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. கோட்டைக்கு வெளியே என் படை வராவிட்டால் கோட்டையைப் பிடிக்க முடியாதென்று உங்களுக்குத் தெரியும். ஆகவே என்னை வளைக்க இவரை அனுப்பினீர்கள். ஆனால் இவர் ஒரு பெண்ணைப் போருக்கு அனுப்ப இஷ்டப்படாமல் தானே படைகளை நடத்தி வந்தார். அதனால் உங்கள் இஷ்டத்தையும் நிறைவேற்றினார். தானும் மடியப் பார்த்தார்..." என்று.

மீதிச் சொற்களை மன்னவனே முடித்தான். "முடியவில்லை மங்கலதேவி வில்லேந்தியதால்" என்ற மன்னன், "மங்கலதேவி! இன்று போரை என் படை வென்று விட்டது. கொங்கர்கோன் இனி தலை எடுக்க முடியாது. ஆனால் இது பாண்டியன் தோல்வி," என்றும் கூறினான்.

"எப்படி மன்னவா?" - முதன் முதலாக மௌனத்தைக் கலைத்தான் ரகுவீரன்.

"ஒரு பெண்ணுக்கு- அஞ்சி ரணதீரன் வாளை உறைக்குள் போட்டான் என்பதே தனிச் சரித்திரம்," என்ற பாண்டிய மன்னன், "தேவி! வா கோட்டைக்குப் போவோம்," என்று கூறி மலை மீது ஏறி நடந்தான்; தேவியும் ரகுவீரனும் அவனைத் தொடர்ந்தனர்.



அன்றிரவு ஆஸ்தான மண்டபத்தில் தன் வீரர் புடைசூழ அமர்ந்திருந்த மன்னன், தனது படைத் தளபதிகளை நோக்கி, "படைத்தலைவர்களே! இன்று பாண்டிய சாம்ராஜ்யக் கனவு பூர்த்தியாகிறது. மகாரதர்கள் வெல்லப்பட்டார்கள். மங்கலபுரக் கோட்டையும் நமது வீரத்துக்கு அடிபணிந்தது. இனி நம்மிடம் சிக்கியுள்ள மங்கலதேவிக்குத் தண்டனையளிக்க வேண்டும். என்ன தண்டனை அளிக்கலாம்?" என்று வினவினான். இதைச் சொன்ன அரசன் குரல் கடுமையாக இருந்தது.

"சிறையிலடைக்கலாம்," என்றான் ஒரு படைத் தலைவன்.

"ரகுவீரனை என்ன செய்யலாம்?" என்றான் மன்னவன்.

"நமக்கெதிராகப் போரிட்டிருக்கிறார். அதற்கு மரண தண்டனைதான்," என்றான் இன்னொரு படைத் தலைவன்.

"ராஜத் துரோகத்துக்கு மரணம் மிக எளிய தண்டனை" என்றான் ரணதீரன்.

அதைக்கேட்ட படைத்தலைவர்கள் திகைத்தனர். மன்னன் ஆசனத்தை விட்டு எழுந்திருந்தான். தனது படைத் தலைவனை அழைத்து, "அவளுடன் இவனையும் ஒரே அறையில் தள்ளிப் பூட்டி வையுங்கள். நாளைக் காலையில் தண்டனை கொடுக்கிறேன்," என்று கூறிவிட்டு மன்னவன் ஆஸ்தான மண்டபத்தை விட்டு விலகினான்.

மறுநாட் காலை அவர்களிருந்த கதவு திறக்கப்பட்டது. மெல்ல உள்ளே தலையை நீட்டிய காவலன் சட்டென்று தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு, "தேவி! தேவி!" என்று கூவினான்.

தேவி சில விநாடிகளுக்குப் பிறகு, சிற்றிடை துவள வெளியே வந்து, "என்ன?" என்று விசாரித்தாள்.

"விடியற்காலையில் பாண்டிய மன்னன் படையுடன் புறப்பட்டுப் போய்விட்டார்" என்றான் காவலன்.

"போய் விட்டாரா!" - வியப்புத் தாங்கவில்லை மங்கலதேவிக்கு.

"ஆம்."

"படைகள்?"

"அவருடன் போய்விட்டன."

"உத்தரவு எதுவும் இடவில்லையா?"

"இல்லை. இந்த ஓலையைக் கொடுக்கச் சொன்னார்," என்று காவலன் ஓர் ஓலையை நீட்டினான்."

"தேவி! மங்கலாபுரத்தை என் சார்பில் காத்து வா. ரகுவீரனைப் படைத்தலைவனாக வைத்துக் கொள். அவனை நம்பி வெளியே விடாதே - ரணதீரன்" என்று இருந்தது ஓலையில்.

தேவியின் முகத்தில் மந்தகாசம் விரிந்தது. திரும்பி உள்ளே பார்த்தாள். வெட்கம் அவள் முகத்தில் வழிந்தோடியது. "சரி போ" என்று காவலனை அனுப்பி விட்டு மீண்டும் கதவைத் தாழிட்டாள்.

●

# பழிவாங்கும் விழிகள்

**மே**லே முக்கோணமாகவும் பக்கவாட்டுகளில் செங்குத்தாகவும் பட்டு ஜால்ராக்கள் தொங்கும்படி இரு புறமும் லேசாக எடுத்துக் கட்டப்பட்டிருந்த முத்துச் சிவிகைச் சீலையை சற்று அதிகமாகவே விலக்கி எட்டிப் பார்த்த ராதிகாதேவி, தன் கண்முன் விரிந்த காட்சியைப் பார்த்து, கலகலவென வாய் விட்டே நகைத்து விட்டாள். கீழே மண்ணில் இடக்கையில் ஓலைச் சுவடியுடனும், வலக்கையில் எழுத்தாணியுடனும் புரண்டு கிடந்த அந்த வாலிபன் சட்டென்று எழுந்து, எதிரேயிருந்த புரவி வீரன் மேல் பாய இருந்தவன், ராதிகாவின் சிரிப்பொலியைக் கண்டதும் ஒரு கணம் தாமதித்தான். அவள் செவ்வாயுடன் சேர்ந்து நகைப்பை உதிர்த்த அவளது வேல்விழிகளும், செங்கழுத்தும், எழுச்சியுள்ள கவர்ச்சி மொட்டுக்கள் இரண்டைத் தொட்டுக் கொண்டிருந்த முத்தாரத்தின் நிலையும், அவனை ஏதோ செய்திருக்க வேண்டும். உட்கார்ந்திருந்த நிலையில் ஒருமுறை லேசாக அசைந்த அவள் இடைகூட அவன் உணர்வைத் தொட்டிருக்க வேண்டும். ஆனால் தொட்ட நிலையை அவன் விட்டொழிக்க ஒரு கணத்திற்கு மேல் ஆகவில்லை. ராதிகாவின் உடலிலிருந்து விடுபட்ட மோகனாஸ்திரங்கள் அளித்த மயக்கத்திலிருந்து விநாடி நேரத்தில் மீண்ட அந்த வாலிபன், அக்கம் பக்கம்

இரண்டிலும் கண்களைத் திருப்பினான் இருமுறை. அவன் வலப்பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். அவனை அடித்து மண்ணில் புரள வைத்த பூதலன், இடப்பக்கத்தில் புரவி மீது அமர்ந்து, கையில் உருவிப் பிடித்த வாளின் நுனியால், வாலிபன் எழுந் திருந்ததும் அவன் ஊட்டியைத் தடவிக் கொண் டிருந்தான் கடிகைக் காவலனான மகேந்திரன்.

மண்ணிலிருந்து எழுந்த வாலிபன், ராதிகாவை மீண்டும் நோக்கிவிட்டுத் தனது உடலுக்கு குறுக்கே ஓடிய யோக வேஷ்டியையும் முப்புரி நூலையும் சரிப்படுத்திக் கொண்டதன்றி, உடலில் ஒட்டிக் கிடந்த மண்ணையும் தட்டிக் கொண்டான். விசாலமான வதனத்தைத் தடவிக் கொண்டிருந்த தலையின் காக பட்ச குழல்களையும் தலையை ஓர் அசை அசைத்துத் திருத்திக் கொண்டான். முகத்தில் பளீரெனத் தெரிந்த கோபி சந்தனம் மட்டும் சிறிதும் அழியாததால் அவன் தணல் விழிகளுக்கு சாந்தம் செய்ய முயன்று கொண்டிருந்தது அந்தத் திலகம்.

மண்ணில் புரண்டு எழுந்த பின்னும் அச்சமின்றி நின்ற அந்த வாலிபனைக் கண்ட ராதிகா வியப் படைந்தாள். ஆறு அடி உயரத்துடனும், வீச்சான கால்களுடன் ஒல்லியான சரீரத்துடன் காட்சி யளித்த அந்த வாலிபன் என்ன அழகாயிருக்கிறான் என்று நினைத்த ராதிகாதேவி, சிரிப்பை உதிர்த்த தனது வாயின் செவ்விய இதழ்களைச் சற்றே மூடி, புன்முறுவலைப் பரவ விட்டுக் கொண்டாள்.

இத்தனையும் இரண்டு விநாடிகளுக்குள் அளந்து கொண்ட அந்த வாலிபன் சீற்றத்துடன் கேட்டான். “பல்லவ அரசில் எத்தனை நாளாக அந்தணர்கள் அடித்து வீழ்த்தப்படுகிறார்கள்?” என்று.



ராதிகாவின் விழிகளில் வியப்பு விழுந்தது. “நீ அந்தணனா?” என்ற அவள் கேள்வியில் வியப்பின் சாயையும் நன்றாக ஒலித்தது.

“இதோ இந்த முப்புரி நூலைப் பார்த்தால் தெரிய வில்லையா?” என்று தனது பூணூலை எடுத்துக் காட்டினான் வாலிபன்.

“முப்புரி நூல் க்ஷத்திரியர்களுக்கும் உண்டு,” என்றாள் ராதிகா.

அவள் பேச்சில் தொனித்த சாரீர இனிமையை அந்த வாலிபன் ரசிக்க முடியவில்லை, உள்ளூரப் புகைந்து கொண்டிருந்த கோபத்தினால். ஆகவே கேட்டான், “க்ஷத்திரியர்கள் இந்த மாதிரி யோக வேஷ்டியுடன் வெளியே வருவார்களா?” என்று.

“மாட்டார்கள். ஆனால் உன்னைப் போல் காக பட்சம் வைத்திருப்பார்கள்,” என்று அவன் அழகிய குழல்களைச் சுட்டிக் காட்டிய ராதிகா, “உன் பெய ரென்ன? ஏன் என் சிவிகையின் குறுக்கே வந்தாய்?” என்று இன்னொரு கேள்வியையும் வீசினாள்.

“மயூரசர்மன் என் பெயர். கடிகையின் மாணவன். மாண்டவ்ய கோத்ரம்,” என்றான் அந்த வாலிபன். பெருமையுடன் உஷ்ணமும் தொனித்த குரலில் அடுத்தபடி ஒரு கேள்வியையும் கேட்டான், “காஞ்சிமா நகரின் சாலைகள் உன் சிவிகைக்கு மட்டுந்தான் சொந்தமா?” என்று.

“அரச மகளிர் சிவிகை வரும்போது பாதசாரி எவரும் குறுக்கே வரக்கூடாதென்பது பல்லவர் ஆணை,” என்ற ராதிகாதேவி, “சரி சரி; சிவிகையை விடு” என்றாள், சிவிகைக் காவலரை நோக்கி.

சிவிகை நகருமுன்பு மீண்டும் ஒரு முறை அவனைப் பார்த்து நகைக்கவும் செய்தாள்.

"பல்லவர் ஆணையா? திமிரா?" என்று கேட்ட மயூரசர்மன், "இன்று நீ சிரிக்கிறாய் அரச மகளே இப்படித்தான் திரௌபதியும் அன்று சிரித்தாள் இங்கும் ஒரு மகாபாரதம் வரும். பொறுத்துப் பார் மாம்ஸபலத்தால் உன்னைக் காக்கும் இந்த ராட்சதப் பிண்டமும் புரவி மீதிருப்பதாலும் வாள் கையிலிருப்பதாலும் வீரனாகத் தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் இந்த மீசை அலங்காரமும் உன்னை எத்தனை நாள் பாதுகாப்பார்கள் பார்க்கிறேன். பல்லவ அரசை முறிக்கிறேன் தேவி, இல்லையேல்..." என்று சீறவும் செய்தான் சொற்களை முடிக்காமல்.

"குடுமியை முடிய மாட்டாய். சாணக்கிய பரம்பரையா நீ? அப்படியானால் உனக்கும் ஒரு சந்திரகுப்தன் வேண்டும்?" என்று மயூரசர்மன் வாசகத்தை தானே முடித்த ராதிகா, இகழ்ச்சி முறுவல் கொட்டினாள்.

"இந்த சாணக்கியனுக்கு சந்திரகுப்தன் தேவையில்லை. இவனே சந்திரகுப்தனாக முடியும்," என்ற மயூரசர்மன் மேலே ஏதோ பேச முயலுமுன்பு காவலன் குதிரையால் இடரப்படவே மறுபடியும் கீழே விழ இருந்தவன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். சிவிகை ஊர்ந்தது- பல்லவர் அரண்மனையை நோக்கி. போகும் அந்தப் பல்லக்கைப் பார்த்துக் கொண்டே நின்ற மயூரசர்மன் எட்ட இருந்த கடிகைக்குள் சென்று, நேராகக் கடிகைத் தலைமைக் குரு இருந்த இடத்தை நாடி நடந்தான். குருவை சாஷ்டாங்கமாக நமஸ்காரம்



செய்து, நடந்த விஷயங்களை எடுத்துக் கூறிப் பரிகாரம் கேட்டான்.

குருநாதர் சிந்தனையில் ஆழ்ந்தார் சில வினாடிகள். "சிவிகையில் இந்த நேரத்தில் அரச மகள் ராதிகாதேவிதான் வருவாள். நீ குறுக்கே சென்றது தவறுதான்," என்றார் முடிவில்.

"அந்தணனை அடிக்க சாஸ்திரம் இடங் கொடுக்கிறதா?" ஆசார்யரை தீ விழிகளுடன் நோக்கிக் கேட்டான் மயூரசர்மன்.

"இல்லை."

"அப்படியானால் பல்லவ மன்னனிடம் சொல்லி மகேந்திரனையும் அந்த ராட்சதனையும் தண்டிக்கச் சொன்னால் என்ன?"

"மகேந்திரன் பல்லவ மன்னரின் மருமகன். ராட்சதன் அரசகுமாரியின் மெய்க்காவலன்," என்று சுட்டிக் காட்டினார் ஆசார்யர்.

"அதனால்?"

"தண்டிக்க முடியாது. ஆமாம், அரச குமாரியுடன் வந்தவன் மகேந்திரன் தானென்பது உனக்கெப்படித் தெரியும்?"

"பலமுறை பார்த்திருக்கிறேன்; மக்கள் பேசக் கேட்டிருக்கிறேன்," என்ற மயூரசர்மன் முடிவாகக் கேட்டான் ஆத்திரத்துடன்: "ஆசார்யரே! உம்மால் என் அவமானத்திற்குப் பரிகாரம் தேட முடியுமா முடியாதா?"

"முடியாது," என்றார் ஆசார்யர் திட்டமாக.

"அப்படியானால் நான் போகிறேன் என் ஊருக்கு," என்றார் மயூரசர்மன்.

"வேதம் படிக்க வந்திருக்கிறாய்," என்று சுட்டிக் காட்டினார் ஆசார்யர்.

"ஆம்."

"அத்யயனம் பூர்த்தியாகவில்லை."

"வேண்டா."

"போக முடிவு செய்து விட்டாயா?"

"ஆம்."

"பிறகு என்ன செய்வதாக உத்தேசம்?"

"வேதத்தால், வேத குருவான தங்களால் துடைக்க முடியாத எனது அவமான மாசை வாளினால் துடைக்கிறேன். வேதத்தைவிட வாள் வலிது என்பதை இன்று, புரிந்து கொண்டு விட்டேன் ஆசார்யரே," என்று சற்று இரைந்தே பேசிய மயூரசர்மன் தன் கையிலிருந்த ஏட்டுச் சுவடியையும் எழுத்தாணியையும் குருநாதன் முன்பே எறிந்து விட்டு வெளியே ஓடினான்.

மாலப்பிரபா நதி, கருங்கற்களிடையே சலசல வென்று ஓடிக் கொண்டிருந்தது. அதில் நீராடி எழுந்த மயூரசர்மன் அருகிலிருந்த ஒரு குடிசையை நாடிச் சென்றான். அக்குடிசை வாயிலில் நின்று எட்ட இருந்த ஸ்ரீபர்வதத்தையும் அதைச் சூழ்ந்து கிடந்த அடர்ந்த அடவியையும் நீண்ட நேரம் நோக்கிக் கொண்டு நின்றான். "மயூரா, என்ன செய்கிறாய் அங்கே?" என்று அவன் தாயின் குரல் ஒலித்தது, குடிசைக்குள்ளிருந்து. மயூரசர்மன் காதுகள் அந்த ஒலியை வாங்கின. கண்கள் மிருது வடைந்தன. உள்ளே சென்று மயூரசர்மன் தாயை வணங்கினான். அன்னை அவனுக்கு அன்னம்



பரிமாறிக் கொண்டே சொன்னாள்: "இந்தப் பிடிவாதம் வேண்டாம், பிராம்மணன் வேதம் ஓத ஏற்பட்டவன்," என்று.

"வேதத்தின் பயனைக் கண்டுவிட்டேன், வாளின் பயனையும் பார்ப்போம். இன்று ஸ்ரீபர்வதத்துக்குப் போகிறேன்," என்று சொன்னான் மயூரசர்மன்.

"அங்கு எதற்கு?" என்று கேட்டாள் அன்னை.

"வித்தியாசகரிடம் வித்தை பயில."

"அவனிடமா?"

"ஆமம்மா."

"அவனுக்கு வேதம் தெரியாதே. சுத்த முரடன்."

"அந்த முரட்டுத்தனத்தைக் கற்றுக் கொள்கிறேன். வாள் வித்தை, வில் வித்தை எல்லாம் பயின்று விட்டு வருகிறேன்" என்று கூறி, உணவை முடித்துக் கொண்டு எழுந்த மயூரசர்மன், அடுத்த ஒரு நாழிகைக்கெல்லாம் ஸ்ரீபர்வதத்தை நோக்கி நடந்தான்.

ஸ்ரீபர்வதத்தின் அடியிலிருந்த வித்யாசாகர் ஆசிரமத்தை அண்டிய மயூரசர்மன், ஆசிரம வாயிலில் மூன்று புரவிகள் நிற்பதைக் கண்டான். ஆனால் மூன்று புரவிகள் மீதும் உட்கார ஆசனமேதுமில்லா திருந்ததையும் கடிவாளக் கயிறுகளும் ஒப்புக்கே அவற்றின் வாய்களில் கட்டப்பட்டிருப்பதையும் கண்டான். அதனால் ஏற்பட்ட வியப்புடன் ஆசிரமத்துக்குள் நுழைந்த மயூரசர்மன் வித்யாசாகரர் முன்பு நெடுஞ் சாண்கிடையாக விழுந்து எழுந்தான். கைகட்டி அவர் முன்பு நிற்கவும் செய்தான்.

வித்யாசாகரர் அவனை ஏறெடுத்து நோக்கி, "வேதாப்பியாசம் முடிந்து விட்டதா மயூரசர்மா?" என்று வினவினார்.

"இல்லை" என்றான் மயூரசர்மன்.

"ஏன்? மகேந்திரனும் பூதலனும் அடித்து விட்டதாலா?" என்று கேட்ட வித்யாசாகரர் மெல்லச் சிரித்தார்.

மயூரசர்மனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "தங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினான் மயூரசர்மன்.

"காஞ்சியில் என் சீடர்கள் இருக்கிறார்கள்," என்றார் வித்யாசாகரர்.

"சீடர்களா, ஒற்றர்களா?"

"இரண்டு விதமாகவும் வைத்துக் கொள்ளலாம்."

"அடுத்த சீடன் வந்திருக்கிறேன், ஒற்றனாக விரும்பவில்லை."

"உன்னை ஒற்றனாக்க எனக்கும் விருப்பமில்லை," என்ற வித்யாசாகரரை மயூரசர்மன் மீண்டும் வணங்கினான். "வித்தையை யாசிக்கிறேன்," என்று சொன்னான்.

வித்யாசாகரர் தலையசைத்தார். பிறகு எழுந்து மயூரசர்மனை வெளியே அழைத்துச் சென்றார். "இந்தப் புரவிகளில் ஒன்றை நண்பனாக்கிக் கொள்," என்றார், அங்கிருந்த மூன்று புரவிகளையும் காட்டி.

"புரவியை நண்பனாக்கிக் கொள்வதா?" வியப்புடன் வினாவினான் மயூரசர்மன்.

"ஆம்!" என்ற வித்யாசாகரர் ஒரு புரவியிடம் சென்று அதன் வாயைத் தடவிக் கொடுத்தார். மூக்கு



களையும் வருடினார். கழுத்தைக் கட்டினார். முதுகை ஒருமுறை தட்டினார். புரவி சிலிர்த்தது, நிமிர்ந்தது அவரை மோந்தது. "பார்த்தாயா மயூரசர்மா! இப்புரவியின் புத்தி எத்தனை கூர்மை. மனிதனுடன் இத்தனை அன்பு காட்ட அதனால் முடியும்! உனக்குப் பிடிக்கும் புரவியை நீயும் சகோதரனாக நினை. அது உன்னை நேசிக்கும்," என்றார்.

அப்புரவிகளைச் சிறிது நேரம் நோக்கிய மயூரசர்மன் ஒரு சந்தன நிறப் புரவியை அணுகி வித்யாசாகரர் செய்த சைத்தியோபசாரத்தை அவனும் செய்தான். புரவி அவனை முத்தமிட்டது. முகத்தை உயரத்தூக்கி, "இனி அதன் மீது பாய்ந்து ஏறு" என்று வித்யாசாகரர் உத்தரவிட, மரத்தில் கட்டியிருந்த கடிவாளக் கயிற்றை அவிழ்த்து அதன் மீது ஏறினான் மயூரசர்மன். அடுத்த விநாடி புரவி மேலே எழும்பி இருமுறை குதிக்க, மயூரசர்மன் நிலத்தில் புரண்டான். வித்யாசாகரர் பெரிதாக நகைத்துக் கொண்டு சொன்னார், "மயூரசர்மா! புரவி மீது தாவியதும் லேசாகக் கழுத்தைத் தடவிக் கொடு. பிறகு அதன் காதில் சேதி சொல்லு, அன்பாகப் பேசு," என்று. மயூரசர்மன் ஐம்புலன்களையும் புரவியேற்றப் பயிற்சியில் செலுத்தினான். மேலே தாவி ஏறி, கடிவாளக் கயிற்றை மெல்லப் பிடித்து, அதன் காதில் குனிந்து செல்லமாகப் பேசினான். புரவி இம்முறை ராஜநடை போட்டு நடந்தது.

அடுத்த பதினைந்து நாட்களில் குதிரை ஏற்றம் பயின்ற மயூரசர்மன், பழி வாங்கும் வேட்கையால் புரவியை மிக அநாயாசமாகச் செலுத்தினான்.

பதினொன்றாவது நாள் வித்யாசாகரின் சீடர்கள் ஐந்து பேர் காஞ்சியிலிருந்து வந்தார்கள். எல்லோரும்

அந்தணர் அல்லர், பலதரப்பட்டவர்கள், ஆனால் அனைவர் கையிலும் வில்லும் வாளும் இருந்தன. "இவர்கள் உன் ஆரம்பப் படை," என்று அவர்களை அறிமுகப்படுத்தினார் வித்யாசாகரர்.

மாதங்கள் உருண்டு ஓடின.

பல்லவ மன்னனான குமார விஷ்ணு, வியப்பின் எல்லையை எய்தி இருந்தான். தனது அரண்மனையின் அந்தரங்க அறையில் உலாவிக் கொண்டு, எதிரே நின்றிருந்த சேனாதிபதியையும் இரண்டு உபதளபதிகளையும் உற்று நோக்கி, "மயூரசர்மனா? அவன் யார்? நமது எல்லைப்புற சிற்றரசர் பிரகத் பாணர்களை அடிமைப் படுத்தி விட்டானா?" என்று கேட்டான்.

"ஆம் மன்னவா! மயூரசர்மன் ஒரு அந்தணன். நமது கடிகையில் படித்தவன். இப்பொழுது படை திரட்டி, நமது எல்லைப்புறங்களைப் பிடிக்கிறான்," என்றான் சேனாதிபதி.

"நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் பல்லவ மன்னன் குமார விஷ்ணு.

"இது நேர்முகப் போரல்ல. மயூரசர்மன் புரவிப் படை எப்பொழுது வருகிறது, எப்பொழுது போகிறது என்பது தெரியவில்லை. சூறாவளி போல் வந்து போகிறது," என்றான் உபசேனாதிபதிகளில் ஒருவன்.

"இங்குகூட அவர்களில் இருவர் வந்தார்கள்," என்றான் மெல்ல மற்றொரு உபசேனாதிபதி.

"இங்கா?" குமாரவிஷ்ணு அதிர்ச்சியுடன் கேட்டான்.



"ஆம்!"

"எப்பொழுது?"

"நேற்றிரவு!"

"காஞ்சிக்குள்ளா?"

"ஆம் மன்னவா! வந்து நமது மகேந்திரனையும் பூதலனையும் தூக்கிச் சென்று விட்டார்கள்." இதை மிகுந்த பயபக்தியுடன் சொன்னான் உபசேனாதிபதி.

அந்த சமயத்தில் அரசமகள் ராதிகாதேவி அந்த அறைக்குள் அசுர வேகத்தில் நுழைந்து, "இங்கு பல்லவ அரசு நடக்கிறதா நசித்துவிட்டதா?" என்று வினவினாள், சுடுவிழிகளை தந்தையின் மீது வீசி.

மகளின் சிற்றத்தைக் கண்ட பல்லவ மன்னன், தனது இதழ்களில் குறுநகை கூட்டினான். "எப்பொழுதும் பெண்கள் சிரிப்பு, அனர்த்தத்தையே விளைவிக்கும்," என்று கூறினான் முறுவலின் ஊடே. பிறகு சேனாதிபதியை நோக்கி, "எனது காவற்படை தயாராகட்டும். ராதிகாவும் என்னுடன் வருகிறாள்," என்று உத்தரவுமிட்டான்.

"எங்கு செல்ல மன்னவா?" என்று வினவினான் சேனாதிபதி.

"மயூரசர்மன் கோட்டைக்கு."

"அது காடல்லவா?"

"அப்படியானால் காட்டுக்கோட்டைக்கு என்று வைத்துக் கொள்," என்ற மன்னன், அவர்கள் செல்லலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான்.

ஸ்ரீபர்வதத்தின் அடிவாரத்தின் அடவியில் சுற்றிருந்த மரக்கிளைகள் சிறிது வெட்டப்பட்ட இடைவெளியில், மொட்டையாகிவிட்ட மரக்கிளைகளிலிருந்து பந்தங்கள் வீசிய வெளிச்சத்தில், பூதலனும் மகேந்திரனும் வலுவான கயிறுகளால் பிணைக்கப்பட்டு நின்றிருந்தார்கள். அவர்களைக் காத்திருந்த வீரர்களை விலகும்படி பணித்த வண்ணம் மயூரசர்மன் அந்த இடைவெளிக்கு வந்தான். இருவரையும் ஒரு விநாடி உற்று நோக்கினான். பிறகு பூதலனை அவிழ்த்துவிடச் சொல்ல, "பூதலா! முதலில் உன் மாம்ஸ பலத்தைப் பரிசிலிப்போம்" என்று அங்கியைக் கழற்றிப் பக்கத்திலிருந்த வீரனிடம் கொடுத்தான்.

பூதலன் கண்கள் பயங்கரமாகச் சுழன்றன. கைகளை வீசிக்கொண்டு, "மயூரசர்மா! தர்மயுத்தம் செய்து பார். உன்னைப் பிண்டமாகப் பிடித்து விடுகிறேன்," என்று சொல்லிக் கொண்டே கைகளைத் தொடைகளில் தட்டினான்.

"இது காஞ்சியன்று. இங்கு தர்மயுத்தத்தைத் தவிர வேறு கிடையாது," என்று மயூரசர்மன் சர்வ சாதாரணமாகப் பூதலனை அணுகி அவன் பிடிக்குள் நுழைந்தான். இரண்டு விநாடிகளுக்கெல்லாம் பூதலன் ஓவென்று அலறிக்கொண்டு மண்ணில் புரண்டான். அவனை நோக்கி நின்ற மயூரசர்மன், "பூதலா! மாம்ஸம் மட்டும் நமது உடலில் இல்லை, நரம்புகளும் இருக்கின்றன. அவற்றையும் அறிந்து கொள்ள, காஞ்சியில் காலம் கழித்துப் பயனில்லை. வித்யாசாகரிடம் வந்து பயின்று கொள்," என்று கூறிவிட்டு, "எங்கே என் வாள்?" என்று பக்கத்திலிருந்த வீரனைக் கேட்டான். வாளை வாங்கிக்



கொண்டதும், "மகேந்திரவர்மன் கட்டுகளை அவிழ்த்து விடுங்கள். அன்று புரவியில் நீட்டிய வாளின் பலத்தைப் பார்ப்போம்," என்றான்.

மகேந்திரன் சொப்பன ஸ்திதியிலிருந்தான். பூதலன் கதி அவனைக் கலங்க வைத்திருந்தது. அவன் நிலைக் கண்ட மயூரசர்மன், "சே! நீ இவ்வளவு தானா! நிராயுத பாணிகளை விரட்டத்தான் உனக்குத் தெரியும் போலிருக்கிறது?" என்று கூறிவிட்டுத் தனது வீரர்களை நோக்கி, "இவர்களை விடுதலை செய்து அனுப்பி விடுங்கள். இனி பல்லவ மன்னனை வரவழைப்போம்," என்றான்.

"தேவையில்லை, நானே வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டு மகளுடன் பந்தங்களின் வெளிச்சத்தில் நுழைந்தான் குமாரவிஷ்ணு.

மயூரசர்மன் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. "தனியாகவா வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான் சொப்பனத்திலிருப்பவன் போல்.

"இல்லை, மெய்க்காவலர் படைவந்திருக்கிறது," என்றான் குமாரவிஷ்ணு.

"அவர்கள்?"

"எட்ட இருக்கிறார்கள். ஆனால் வந்தது போருக்காக அல்ல!"

"வேறு எதற்கு?"

"சமாதானத்திற்கு." இதைப் பல்லவ மன்னன் உறுதியுடனும் திடத்துடனும் சொன்னான். "மயூர சர்மா! குமாரவிஷ்ணு அச்சப்படுபவனல்லன். ஆனால் உண்மை நிலையை ஆராய்ந்து போரைத் தடுப்பது மன்னனின் கடமையாகும். உனக்கு இந்த மடையர்கள் செய்த இடையூறு பல்லவ ராஜ்யத்தின்

எல்லைகளை இழக்க வைத்து, அதைப் பலவீனப் படுத்தி விட்டது. தவிர வித்யாசாகரரின் இரு சீடர்கள் சண்டையிடுவதும் முறையல்ல," என்று மிக மெதுவாகவும் தர்மசித்தத்துடனும் பேசினான் குமாரவிஷ்ணு.

மயூரசர்மன் பேசவில்லை. நா அடைத்து நின்றான். எந்தப் பல்லவ மன்னனை ஒடுக்க நினைத்தானோ அவனே தன் முன் வந்து போரிடாமலேயே தன்னை ஒடுக்கி விட்டதை எண்ணிப் பார்த்தான். இத்தனையிலும் மன்னன் அருகே நின்ற ராதிகாவை எரிச்சலுடன் நோக்கினான். குமாரவிஷ்ணு ஒரு விநாடி சிந்தனையில் இறங்கினான். பிறகு ராதிகாவைச் சுட்டிக் காட்டி, "உனக்கு இஷ்டப்பட்ட தண்டனையை இவளுக்குக் கொடுக்கலாம்," என்று சொன்னான்.

இந்தச் சமயத்தில் ஆசிரமத்திற்குள்ளிருந்து வந்த வித்யாசாகரர் குமாரவிஷ்ணுவை நோக்கி, "மன்னனே! ராதிகாவை இந்த மகாவீரனுக்குக் கொடுத்து விடு. அவளால் கதம்பவம்சம் தழைக்கட்டும்," என்று ஆணையிட்டார். குமாரவிஷ்ணு தலை வணங்கினான்.

மயூரசர்மன் மட்டும், "நான் அந்தணன், அவள் க்ஷத்திரிய ஜாதி," என்று சுட்டிக் காட்டினான்.

"ருஸ்யசிருங்கரும் அப்படித்தான்," என்றார் வித்யாசாகரர்.

பல்லவ ராஜ்யத்துக்கு மயூரசர்மனின் தொல்லை ஒழிந்தது. காட்டுக் குடிசையில் இரண்டு இரவுகள் கழித்துப் படுத்துக் கிடந்த மயூரசர்மன் ராதிகாவை நோக்கிச் சொன்னான், "மன்னன் மகளே! சீக்கிரம்



நமக்கு அரண்மனை கட்டி விடுகிறேன். மஞ்சத்தில் நீ படுக்கலாம்," என்றான்.

ராதிகா பதில் பேசவில்லை. மௌனமாயிருந்தாள்.

"கொஞ்சம் சிரி" என்றான் மயூரசர்மன்.

"சிரித்தால் இன்னும் ஒரு போர் நிகழலாம்," என்றாள் ராதிகா.

கடைசியில் ராதிகா சிரிக்கவே செய்தாள். மீண்டும் ஒரு போர் நிகழத்தான் செய்தது. அதில் இருவருக்குமே வெற்றி, இருவருக்குமே களைப்பு! "முந்திய குற்றத்துக்கு நன்றாகப் பழி வாங்கி விட்டீர்கள்," என்ற ராதிகாவின் குளறிய சொற்கள் நிலையை நிரூபித்தன. அன்று நகைத்த, விழித்த விழிகள் இன்றும் நகைத்தன. ஆனால் அவனை ஆயுள் முழுவதும் பழிவாங்கின அவள் விழிகள். அவை சுழன்ற போதெல்லாம் மயூரசர்மன் இன்பத்தில் ஆழ்ந்தான். என்ன இருந்தாலும், என்ன செய்தாலும், ஆண்மகன் பெண்களுக்கு அடிமை தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

# மஸ்தானி

பிராமணனான பேஷ்வா பாஜிராவ் சந்தி புரிய வேண்டிய அந்தி வேளையில் தனது வளைவு வாளிலிருந்த இரத்தத்தையும் சதைப் பற்றுகளையும் இடக்கையால் துடைத்து, ஜெயித்பூர் கோட்டைக் குப் பின்னால் மறைந்து கொண்டிருந்த மாலைக் கதிரவனின் செவ்விய கிரணங்களை நோக்கி விட்டெறிந்தார். 'அர்க்கியம் விட்டு பூமியை நனைக்க வேண்டிய அந்தணனான தான், குருதியை உதிர்த்து நிலத்தை நனைத்து விட்டதை எண்ணி, பிறப்புக்கும் வாழ்வுக்கும் எத்தனை வேற்றுமை!' என்று தனக்குள் சொல்லியும் கொண்டார்.

அப்படி அவர் க்ஷத்திரிய வாழ்க்கையை மேற் கொண்டதைப் பற்றிய சீற்றத்தினாலோ என்னவோ சூரியன் அன்று அளவுக்கதிகமாகச் சிவந்து அந்த அந்தணன்மீது இரத்த கிரணங்களைப் பாய்ச்சி அவன் வீர முகத்தையும் இரத்த மயமாக்கினான். அந்த முகத்தில், சுற்றிலும் எதிரி வீரர்கள் மாண்டு போயும், மாண்டு கொண்டும் இருந்த அந்தக் கோரப் போர்க் களத்தையும் கண்டால் ஏற்பட வேண்டிய பொறுப்புக்கும் துன்பத்துக்கும் பதிலாக, முறுவலொன்று தவழ்ந்து விளையாடியதைக் கண்டு பாஜிராவின் வெண் புரவியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ராஜ்புத்ரனும் பண்டுல் கண்ட் மன்னனுமான **சத்ரஸால்** பெரிதும் வியப்படைந்த



தன்றி, 'இவன் எப்படிப் பிராமண குலத்தில் பிறந்தவன்?' என்று உள்ளூர ஒரு வினாவையும் எழுப்பிக் கொண்டான். ஆனால் சத்ரஸாலின் வாயி லிருந்து வந்த சொற்களில் அந்த வினா இல்லை. நன்றி ததும்பும் சொற்களே வெளி வந்தன. "பேஷ்வா! உங்கள் வீரம் இன்று ஹிந்து மதத்தைக் காத்து விட்டது. எனது ராஜ்யம் மொகலாயர் கைக்குப் போகாமல் காக்கப்பட்டது," என்று கூறினான் சத்ரஸால் - ஜெயித்பூர் போர்க்களத்தில் நின்ற வண்ணம்.

பேஷ்வா பாஜிராவின் வாளினும் கூரிய கண்கள் சத்ரஸாலை ஒரு விநாடி கூர்ந்து நோக்கின. அவர் அழகிய உதடுகள் ஏதும் பேசவில்லை. கை அவர் கச்சையை நாடிச் சென்று ஒரு கடிதத்தை எடுத்து சத்ரஸாலிடம் நீட்டிற்று. அது என்னவென்பது சத்ரஸாலுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தாலும் பயபக்தியுடன் கை நீட்டி வாங்கிக் கொண்டான். அது அவன் அனுப்பியிருந்த ஓலைதான். அவன் எழுப்பிய வேதனைக் குரல்தான். அவன் எழுதியிருந் தான், "பேஷ்வா, முதலை காலைப் பற்றிய யானை யின் நிலையில் நானிருக்கிறேன். உடனே நீங்கள் வராவிட்டால் அழிந்து போவேன்!"

ஓலையைக் கையில் வாங்கிய சத்ரஸால், "பேஷ்வா! என்னை நான் யானையென்று குறிப் பிட்டது தவறு என்று நினைக்கிறேன்," என்று அடக்கத்துடன் சொன்னான்.

"இல்லை, ஹிந்து மதமே யானை போன்றது. அதன் சக்தி அதற்குத் தெரியாது," என்றார் பாஜி ராவ்.

அது உண்மை என்பதற்கு அறிகுறியாகத் தலை யசைத்த சத்ரஸால், "முதலை ஓடிவிட்டது," என்று பாராட்டினான் பேஸ்வாவை.

இல்லையென்பதற்கு அறிகுறியாகத் தலை யசைத்த பாஜிராவ், "சத்ரஸால்! மொகலாயப் படைத்தலைவர்களில் மகமத்கான் பங்காஷ் மகா வீரன், ஓட மட்டான். இந்தப் போர் முடிந்து விட்ட தாக எண்ணுவது தவறு," என்று கூறியவர் சரேலென்று எதையோ நினைத்துக் கொண்டு, "சத்ரஸால்! கஜேந்திர மோட்சத்தின் உவமையை உன் கடிதத்தில் காட்டினாய். ஆனால் உவமை பூர்த்தியாகவில்லை," என்று கூறி லேசாக நகைக்கவும் செய்தார்.

"எப்படி பேஷ்வா?" என்று வணக்கத்துடன் கேட்டான் சத்ரஸால்.

"யானை ஒரு தாமரை மலரை மகாவிஷ்ணுவுக்கு அளித்ததே. நீ ஏதும் அளிக்கவில்லையே," என்று வினவினார் பாஜிராவ்.

சத்ரஸால் பதில் சொல்லவில்லை. 'தாமரை மலர்! தாமரை மலர்!' என்று முணுமுணுத்துக் கொண்டான். அத்துடன் அவ்விடத்தைவிட்டு அகன்று தனது படைத்தலைவனை அழைத்துக் கோட்டைக்குள் சென்று அரண்மனையைச் சுத்தம் செய்யுமாறும் பேஷ்வாவை அழைக்க ஏற்பாடு செய்யுமாறு பணித்தான்.

அன்றிரவு ஜெயித்பூர் கோட்டைக்குள் மகாராஷ் டிர சரித்திரத்தின் மாவீரரான பேஷ்வா பாஜிராவ், தமது வெண்புரவி மீது ஆரோகணித்த வண்ணம் நுழைந்தார். தமது படைத் தலைவனான பிலாஜி ஜாதவுடன். அரசனுக்கு அளிக்கப்படும் வரவேற்பு



பேஷ்வாவுக்கு அளிக்கப்பட்டது. மங்கலவாத்யங்கள் முழங்கின; வேதியர் 'ஜய விஜயீபவ' கோஷம் எழுப்பினர். முக்காடிட்ட ராஜபுதனப் பெண்கள் மங்கல ஆரத்தி எடுத்தனர். தெரு மாடிகளிலிருந்து புஷ்பங்கள் தூவப்பட்டன அந்த இணையற்ற வீரன் மீது.

பாஜிராவ் மிகுந்த வியப்புடன் தமது புரவியை நடத்திச் சென்றார். "இத்தனை விரைவில் இத்தனை ஏற்பாடுகளைச் சத்ரஸால் எப்படி செய்தான்?" என்று உள்ளூர வினவிக் கொண்டார். ஆனால் அரண்மனையில் நடந்த உபசாரம், கோட்டை வாசல் வரவேற்பையும் வீதிவல விழாவையும் தோற்கடிக்கச் செய்தது.

பேஷ்வா தங்கிய அரண்மனை அறையே மண்டபம் போலிருந்தது வாலிப வயதுள்ள பேஷ் வாவுக்கு. பணிப் பெண்கள் வாசனைத் திரவியங் கள் கலந்த நீரால் மங்கல ஸ்நானம் செய்வித்தார்கள். அவர் மெல்லிய உடலுக்குத் தகுந்த துல்லிய வெண்மை ஆடைகள் அணிவிக்கப்பட்டன. அப் படி ஆடை அணிந்து, எப்பொழுதும் தற்காப்புக்கு வைத்திருக்கும் நவரத்தினப்பிடி வைத்த பிச்சு வாவைக் கச்சையில் செருகிய பேஷ்வாவுக்கு அந்த அறையிலேயே உணவும் அளிக்கப்பட்டது. அடுத்த படி சத்ரஸாலே வந்து பேஷ்வாவை மாளிகையின் கேளிக்கை மண்டபத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கு பேஷ்வாவை பட்டுத் திண்டு ஆசனத்தில் சாய்ந்து உட்காரச் செய்து தானும் உட்கார்ந்ததும் எதிரே தலைதூக்கிப் பார்த்தான் சத்ரஸால்.

எதிரே எட்ட இருந்த தபேலாக்களிடம் இரண்டு தபேலாக்கரார்கள் உட்கார்ந்திருந்தார்கள். தரையில் படுக்க வைக்கப்பட்டிருந்த மீரட் தம்பூராவை

ஒருவன் எடுத்து மீட்டினான். அடுத்த நிமிடம் சதங்கை ஒலி கேட்க, வெண்ணிற முக்காடிட்ட நடன மாது ஒருத்தி வந்து நடனத்தைத் துவக்கினாள். மீரட் தம்புரா, தனது நாதத்தால் அந்த மண்டபத்தை நிரப்ப முயன்றது. தபேலாக்களும் ததிங்கிணத்தோம் எனச் சுருதியுடன் கலந்து முழங்கின. இவைனைத்தையும் பேஷ்வா கவனிக்கவில்லை. எதிரே வெண் மேகத்திடை ஊரும் சரத்கால சந்திரனைப் போலும், நடை தரையில் பாவாத அப்ஸரஸ் போலும், சுழன்ற மோகினியையே நோக்கிக் கொண்டிருந்தார். அவள் மறைத்திருந்த மஸ்லின் துணி, முகத்தை மறைக்க முடியாமல் திணறியது, உள்ளிருந்து அபிநய பாவத்துக்கு அசைந்த இரு வேல் விழிகள் மஸ்லினைக் கிழித்திருக்க வேண்டும். துவண்ட இடையில் ஏன் அந்த மேலாடை இழைந்து இழைந்து விலக வேண்டும்? கவனிக்கக் கவனிக்க பேஷ்வா வியந்தார், மெய்ம் மறந்தார். அவள் ஒவ்வொரு அசைவும் பேஷ்வாவின் இதயத்தில் கலந்தது. அவள் உருவமே தன்னுடன் ஒன்றுவதாகத் தோன்றியது பேஷ்வாவுக்கு.

அவள் நடனத்தை முடித்த பின்பும் பேஷ்வா அவளையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். சத்ரஸாலின் சைகைக்கு இணங்க அவள் பேஷ்வாவை நோக்கி வந்தாள். "பெண்ணே! முகத்திரையை எடுத்து விடு," என்றான் பண்டோலா ராஜபுத்ரனான சத்ரஸால்.

அவள் முகத்திரையை நீக்கினாள். பெரிய இரு பங்கஜங்கள் பேஷ்வாவின் வண்டுக் கண்களை மூடின.



"பேஷ்வா, இதோ தாமரை! ஏற்றுக் கொள்ளுங்கள்."

"தாமரையா?" பேஷ்வாவின் உதடுகள் முணுமுணுத்தன.

"ஆம், யானை அளிக்கிறது பரிசு," என்ற சத்ரஸால் அவள் கைகளிரண்டையும் பிடித்து பேஷ்வாவின் கைகளில் திணித்தான்.

பேஷ்வாவின் அவள் பிடித்த முரட்டுக் கரத்தில் அவள் மலர்க் கரங்கள் மென்மையாகத் தேங்கிக் கிடந்தன. "இவள்... யார்...?" என்று கேட்டார் பேஷ்வா.

"என் மகள்," என்றான் சத்ரஸால்.

"பெயர்?"

"மஸ்தானி."

"மஸ்தானியா!" பேஷ்வாவின் குரலில் சிரிப்பு ஒலித்தது.

"ஆம்," என்றான் சத்ரஸால்.

"மஸ்தானி! முஸ்லிம் பெயரல்லவா?"

"ஆம். இவள் முஸ்லிம்தான்!"

"முஸ்லிம் எப்படி ஹிந்துவுக்குப் பெண்ணாக முடியும்?"

"என் வளர்ப்பு மகள்."

"அதுவும் ராஜபுதனத்தில் சாத்தியமல்லவே."

"இதைக் கேட்ட சத்ரஸால் முறுவல் கொண்டான். "பேஷ்வா!" என்று மெல்ல அழைத்தான்.

"என்ன சத்ரஸால்?" என்றார் பேஷ்வா.

"உங்கள் மனத்தை இவளிடம் பறிகொடுத்து விட்டீர்களல்லவா?" என்று வினவினான் சத்ரஸால்.

பேஷ்வா அதற்குப் பதில் சொல்லவில்லை. "நீங்கள் ஹிந்து. அதுவும் அந்தணர். உங்கள் உள்ளத்தை ஒரு முஸ்லிம் பெண் பறிக்கலாமா?" என்று சத்ரஸால் கேட்டான்.

பேஷ்வா மேலும் மௌனம் சாதித்தார். சத்ரஸால் அவரை நோக்கிக் கூறினான், "பேஷ்வா! அன்பு பெருகும்போது சாதி மறந்து விடுகிறது," என்று.

அது எத்தனை உண்மை என்பதை பேஷ்வா வாழ்நாள் முழுவதும் உணர்ந்தார். அன்றிரவு அவர் பள்ளியறையில் ஆரம்பித்து அந்த அன்பு உறவு. அந்தணன் ஆசாரம் அன்று கலைந்தது. அவள் மோகனப் புன்னகையுடன் நீட்டிய மதுவை உண்டார் பேஷ்வா. அவள் இதழ்களில் துளிர்த்த மதுவை மாத்திரம் விட்டாரா என்ன? அன்பின் ஜோதி ஜாதியைத் துடைத்துவிட்டது.

**பாஜிராவ்-மஸ்தானி** காதல் பெரும் கதையாகப் பரவியது மகாராஷ்டிரத்தில். அவர் குடும்பத்தில் அது கலக வித்தை விதைத்தது. மஸ்தானியுடன் அவர் புனாவுக்குள் நுழைந்தபோது சம்பிரதாய வரவேற்பு நடந்தது. அவர் மொகலாயர் மீது அடைந்த வெற்றியை முன்னிட்டு வெற்றித் தாரைகள் ஊதப்பட்டன. ஆனால் அந்தணர் யாரும் அவரை நோக்கி வேதம் ஓதவில்லை. 'ஜெய விஜயீ பவ' சொல்லவில்லை. திரும்பிவரும் கணவனை எதிர்கொள்ளும் பாஜிராவின் மனைவி காசிபாய்



அவரை எதிர்கொள்ளவில்லை. வெற்றித் திலகம் இடவில்லை.

பேஷ்வா இதையெல்லாம் கவனிக்கவே செய்தார். ஆனால் அவர் இரும்பு மனம் எதையும் லட்சியம் செய்யாததால் மஸ்தானியை அவள் புரவியிலிருந்து அவரே கைலாகு கொடுத்து இறக்கி அழைத்துச் சென்றார். அன்றிரவு மனைவி மக்கள் இருந்த இடத்துக்குச் செல்லவில்லை அவர். தன் சொந்த அறைக்கு மஸ்தானியுடன் சென்றார். அவளுக்கு ஒரு தனி அறையை அந்த மாளிகையிலேயே ஏற்பாடு செய்ய உத்தரவிட்டார். அவர் வந்த மறுநாள் கணபதி பூஜை அன்று தம் குடும்பத்துடன் பூஜை மண்டபத்தில் நின்றார். பூஜை முடிந்ததும் யாரையும் மண்டபத்தை விட்டு அகலக் கூடாதென உத்தரவிட்டார். மஸ்தானியை அழைத்து வந்து கணபதிக்கு முன்பு நடனமாடச் செய்தார். அதன் முடிவில், "மஸ்தானி! என் உணவு தயாராயிருக்கிறதா?" என்று வினவினார்.

மஸ்தானி நடுங்கினாள் பதில் சொல்ல. "சொல் யாருக்கும் அஞ்சாதே," என்றார் பேஷ்வா.

"தயார்," என்றாள் மஸ்தானி, நடுங்கும் குரலில். பேஷ்வாவுக்குச் சற்று எட்ட உட்கார்ந்திருந்த காசிபாயையும் நோக்கினாள்.

"மாம்ஸம் வைத்திருக்கிறாயா?"

"வைத்திருக்கிறேன்."

"மது."

"அதுவும் இருக்கிறது."

"சரி வா போவோம்," என்று கூறிய பேஷ்வா அனைவரையும் ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு

மஸ்தானியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு சென்றார்.

காசிபாய் சிலையென உட்கார்ந்திருந்தாள், தனது புதல்வர்களுடன். பேஷ்வாவின் பிடிவாதம் அவளுக்கு நன்றாக தெரியும். இது பெரும் விபரீதத்தில் கொண்டு போய்விடும் என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள்.

மஸ்தானிக்கும் அது விளங்கித்தானிருந்தது. பள்ளியறையில் அவள் அவருக்கு மதுவைக் கொடுக்க மறுத்தாள். "நீங்கள் செய்வது சரியன்று" என்று கூறினாள்.

பேஷ்வா முரட்டுத்தனமாக மதுக் குப்பியைத் தாமே எடுத்துக் குடித்தார். அவளை முரட்டுத்தனமாகத் தூக்கிப் பஞ்சணைக்கு எடுத்துச் சென்றார். அவர் விவகாரம் எல்லாவற்றிலும் அன்று முரட்டுத்தனமும் வெறியுமே விரவிக் கிடந்தது. அந்த முரட்டுத் தனமும் வெறியும் மஸ்தானிக்குத் தேவையாகத்தானிருந்தது. காலத்தில் பேஷ்வாவின் முரட்டுத்தனம் அவளுக்கு ஒரு மகனையும் அளித்தது.

பேஷ்வாவை யாரும் எதிர்த்து எதுவும் சொல்ல முடியவில்லை. அவர் மகாராஷ்டிரத்துக்குச் சம்பாதித்துக் கொடுத்த வெற்றிகள் மன்னர் ஷாஹூவின் வாயைக் கூடக் கட்டியிருந்தது. ஆனால் மதம் அவரை மன்னிக்கவில்லை. அவர் வந்தால் அவர் தம்பிகளுக்குப் பூணூல் போட்டு வைக்க முடியாதென்று வேதியர் மறுத்தனர். இதை பேஷ்வாவின் காதில் மெள்ளப் போட்டாள் மஸ்தானி. "பேஷ்வா! என்னையும் என் மகனையும் என் தந்தையிடம் அனுப்பிவிடுங்கள். என்னால் உங்கள் குடும்பம் பிளவுபடக் கூடாது," என்று கெஞ்சினாள்.



பதிலுக்குப் பேஷ்வா அவளை அணைத்துக் கொண்டார். "மஸ்தானி! என் உயிர் போன பின்பு நீ போகலாம்," என்று சொன்னார்.

மஸ்தானி சிந்தித்தாள், "உங்கள் தம்பிகள் உபநயனம்?" என்று கேட்டாள்.

"நாளை நான் மீண்டும் போர்க்களம் செல்கிறேன். அந்தச் சாக்கை வைத்துக் கொண்டு உபநயனம் நடத்தலாம். வேதியர் வருவார்கள்," என்றார் பேஷ்வா.

மறுநாளே போர் முரசம் கொட்டினார். நிஜாம் நாட்டை நோக்கி அன்று பேஷ்வா புறப்பட்ட போது யாரும் வழியனுப்பவில்லை. மஸ்தானியைத் தம் அறையில் கட்டியணைத்து மகிழ்ச்சியுடன் பயணமானார் பேஷ்வா.

நிஜாம் நாஸர்ஜங் முறியடிக்கப்பட்டார். மகாராஷ்டிரம் கோலாகலத்தில் அமிழ்ந்தது. ஆனால் நர்மதைக் கரையில் பாசறையிலிருந்த பாஜிராவ் மரணத்தின் பிடியிலிருந்தார். செய்தி பறந்தது புனாவுக்கு.

கணவன் மரணப் படுக்கை அருகே நின்ற காசிபாயின் இருதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

"இதோ பாருங்கள். காசிபாய் வந்திருக்கிறேன்," என்றாள் நீர் சுரந்த கண்களுடன்.

சுர வேகத்திலிருந்த பாஜிராவ் மெள்ளக் கண் விழித்தார். கண்ணில் காசிபாய் தெரியவில்லை. "யார் மஸ்தானியா?" என்றார்.

"உங்கள் மனைவி," என்றாள் காசிபாய்.

"மனைவியா!" என்று வருத்தங் கலந்த புன்முறுவலொன்றைப் படரவிட்டார் பாஜிராவ்.

"இதோ குழந்தை ஜனார்த்தனன்," என்று விக்கினாள் காசிபாய்.

"குழந்தையா!" என்றார் மயக்கத்தில் பாஜிராவ். "மஸ்தானி குழந்தைதான். இல்லை நான் அவளுக்குக் குழந்தை. அவள் மடியில் எத்தனை முறை தூங்கியிருக்கிறேன். மஸ்தானி! தலை இடிக்கிறது. மடியைக் காட்டு. சிறிது நேரம் படுக்கிறேன்" என்று தட்டுத் தடுமாறிப் பேசினார் பேஷ்வா.

பிறகு பேசவில்லை. தலை ஒரு புறம் சாய்ந்தது.

காசிபாய் கதறினாள். மகாராஷ்டிரமே கதறியது.

பாஜிராவ் போய்விட்டார் என்ற செய்தி மஸ்தானிக்கு அவள் பள்ளியறையிலேயே அறிவிக்கப்பட்டது, அதைக் கேட்ட அவள் கதறவில்லை, கண்ணீர் விடவில்லை. சிலையென நின்றாள். பிறகு தனது பணிப்பெண் கதீஜாவை அழைத்து, "கதீஜா! மதுவில் சிறிது கொட்டி கொடு," என்றாள்.

கதீஜா நிரப்பிய மதுவுடனிருந்த கோப்பையை கையில் வாங்கிக் கொண்டாள், மஸ்தானி. பிறகு அவளை நோக்கி, "கதீஜா! நீ போ வெளியே," என்றாள்.

"ஏன்?"

"காரணமிருக்கிறது."

"இங்கு நமக்கினி என்ன வேலை அம்மா?"

"எதுவும் இல்லை."

"நமது ஜாகிருக்குப் போகலாமா."

இதைக் கேட்ட மஸ்தானி லேசாகப் புன்முறுவல் காட்டினாள். "நான் ஒரு ஜாகிருக்குப் போகிறேன்," என்றாள் புன்முறுவலின் ஊடே.

"எங்கே அம்மா?" என்றாள் கதீஜா.



"இந்து முஸ்லிம் என்ற பேதமில்லாத ஒரு ஜாகிருக்கு," என்றாள் மஸ்தானி.

"அப்படி ஒரு ஜாகிர் இருக்கிறதா?"

"இருக்கிறது."

"காலையில் சொல்கிறேன் போ!" என்றாள் மஸ்தானி.

பணிப்பெண் அகன்றாள். மஸ்தானி மதுக் கோப்பையுடன் நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தாள். பிறகு அலமாரியிலிருந்து ஒரு வெள்ளைப் பொடியை எடுத்து அதில் தூவிக் கலக்கினாள் நன்றாக. ஏதோ சில வரிகளை ஒரு கடிதத்தில் எழுதினாள். பிறகு மதுவைக் குடித்துவிட்டுப் படுத்தாள்.

**ம**றுநாள் காலை மஸ்தானியை எழுப்ப வந்த கதீஜா பெரிதாக அலறினாள். மாளிகை அமர்க்களப்பட்டது. மஸ்தானி மாண்டு விட்டாள் என்ற செய்தி தீயாகப் பரவியது. காசிபாயே ஓடி வந்தாள் மஸ்தானியின் அறைக்கு. மஸ்தானியின் முகத்திலிருந்த முறுவல் காசிபாயை அயர வைத்தது. அவள் மார்பு மேலிருந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் காசிபாய்.

அதில் எழுதியிருந்தது:

"அன்பு பெருகும்போது சாதி மறைந்து விடுகிறது. எங்களிருவரையும் சாதி பிரிக்கவில்லை. எமன் மாத்திரம் ஏன் பிரிக்க வேண்டும்?"

●

# கோழைச் சோழன்

ஆதித்த குலத்தவனும் இணையிலா வீரனுமான சோழன் தித்தன் தனது அரண்மனை வாயிலில் புகு முன்பு நான்கு திக்குகளிலும் தனது வீர விழிகளைச் செலுத்தினான். அரண்மனையிலிருந்த அரச வீதியிலுங்கூட வாட்போர் வீச்சும், வேலெறி பந்தயமும், விற்போரும் மற்போருமாகப் பல வீர விளையாட்டுகள் அன்று நடந்து கொண்டிருந்ததைக் கண்ட தித்தன் மனத்தில் மட்டும் அவ்விளையாட்டுகள் எந்தவித மகிழ்ச்சியையும் அளிக்கவில்லை. இந்திர விழாவை முன்னிட்டு ஆண்டு தோறும் புகாரில் போலவே உறையூரிலும் நடந்து வந்த அந்தக் கோலாகலக் காட்சிகள், தூரத்தே காவிரிக் கரையில் அந்த நள்ளிரவிலும் நடந்து வந்த கேளிக்கைக் கூத்துகள் இவையனைத்தின் ஒலிகள் கூட அவன் காதில் விழுந்தும் வீரனான தித்தன் மனம் சோகத்தில் ஆழ்ந்துக் கிடந்தது. உலகெலாம் தன் வீரப் புகழ் பாட உறையூரை ஆண்ட தித்தன் அன்று, "நாம் ஏன் இந்தப் பிறவி எடுத்தோம்?" என்று ஏங்கினான் உள்ளூர. ஏங்கியவன் கனத்த மனத்துடன் அரண்மனைக்குள் நுழைந்து காவலர் செலுத்திய வணக்கத்தையும் கவனிக்காது படிகளில் ஏறி முதல் உப்பரிகையை அடைந்தான். அங்கொரு திடீர் சிரிப்பொலி! பகடைகள் உருளும் சத்தம்!



இவற்றைக் காதில் வாங்கிய தித்தன் தனது மடியிலிருந்த குறுவாளை எடுத்துக் கொண்டு அந்த ஒலிகள் வந்த இடத்தை நாடிச் சென்றான்.

அங்கு தலையில் பட்டுச் சீலையால் முக்காடிட்டுக் கொண்டு தோழியர் பலருடன் பகடைகளை உருட்டிக் கொண்டிருந்தான் அவன் ஒரே மகனான நற்கிள்ளி. அரசன் வந்ததை அவன் கவனிக்கவில்லையாயினும் தோழிகளில் ஒருத்தி கவனித்ததால் பகடையிடத்திலிருந்து சரேலென்று எழுந்திருக்க முயல, அவள் சேலை முந்தானையைப் பிடித்துக் கொண்ட நற்கிள்ளி, "எங்கே ஓடுகிறாய் பாதி ஆட்டத்தில்? உட்கார்," என்று அவளை வலிய இழுத்தான்.

"வெற்றி கிடைக்கும் சமயத்தில் யார் விடுவான்? உட்கார்," என்று அதட்டினான் நற்கிள்ளி.

"இளவரசே! விடுங்கள்! பகடை வெற்றி ஒரு வெற்றியல்ல. உங்கள் வெற்றி, வீரத்தில் இருக்க வேண்டும்," என்றாள் தோழி.

நற்கிள்ளி வேகமாக நகைத்தான். "அடி, தோழி! பகடை வெற்றியிடம் வீரத்தின் வெற்றி பலிக்காது. சகுனி பகடையால் வெற்றி கொள்ளவில்லை பாண்டவரை? நாடு கடத்தவில்லை அவர்களை?" என்றும் கூறி மீண்டும் பகடையை உருட்டினான். தலையிலிருந்து நழுவ இருந்த பட்டாடையையும் மீண்டும் இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

இந்தச் சமயத்தில் தித்தன் குரல், கூரிய வாளென நுழைந்தது- அந்த உரையாடலுக்குக் குறுக்கே. "டேய் நற்கிள்ளி! விடு அவள் முந்தானையை," என்றான் தித்தன், சினம் பீறிட்ட குரலில்.

இத்தன் குரலைக் கேட்டதும் நடுங்கிய நற்கிள்ளி, பகடையை அவசர அவசரமாக எடுத்து மடியிற் செருகிக் கொண்டு போர்வையை நன்றாகப் போர்த்திக் கொண்டு எழுந்து நின்றான். "தந்தையே! தாங்களா!" என்று வினவினான் நற்கிள்ளி நடுக்கம் ஒலித்த குரலில்.

"நான்தான், ஆனால் உன் தந்தையல்ல," என்றான் இத்தன்.

நற்கிள்ளியின் கண்களில் அச்சம் தெரிந்தது. "நீங்கள் என் தந்தையில்லையா?" என்று வினவினான் மெள்ள.

"இல்லை. சகுனிக்கு ஒரு தந்தை இருந்ததாகப் புராணங்களில் குறிப்பிடவில்லை."

"நான்..."

"சகுனி பகடையில் வல்லவன். பெண்களிடை பழகுபவன். குதிரையேற்றம் பயில வேண்டிய காலத்தில் குலாவுகிறாய் அரண்மனைச் சேடிகளிடம். வில்லையும், வாளையும் பிடிக்க வேண்டிய கைகள் பகடையையும் கழங்குகளையும் பிடிக்கின்றன," என்ற மன்னன், "டேய்! நற்கிள்ளி! உன்னை அரண்மனைத் தோழிகள் என்னவென்று அழைக்கிறார்கள் தெரியுமா?" என்று வினவினான்.

"என்னவென்று?" நற்கிள்ளி அக்கம் பக்கத்திலிருந்த தோழியை நோக்கினான். அவர்கள் தலைகள் தாழ்ந்து கிடந்தன; கமலக் கண்கள் தரையை நோக்கின!



"மடையா! எப்பொழுதும் பெண்களைப் போல் உடலைப் பட்டாடை கொண்டு போர்த்தியிருக்கிறாயல்லவா?"

"ஆம்."

"அதனால், 'போர்வை கோப்பெரு நற்கிள்ளி' என்று அழைக்கிறார்கள். உன் கோழைத்தனத்துக்கு அரண்மனைத் தோழிகள் சூட்டியுள்ள பட்டம் அது!" இதை வெறுப்புடன் சொன்னான் மன்னன்.

நற்கிள்ளி பக்கத்திலிருந்த தோழியரை நோக்கினான். "பட்டத்து இளவரசனான என்னையா அப்படிப் பழிக்கிறீர்கள்?" என்று வினவினான், அவர்களை நோக்கி.

இந்த சமயத்தில் சுறீலென வாளைப் பாய்ச்சுவது போல் கேட்டான் இத்தன், "நீ பட்டத்து இளவரசன் என்று யார் சொன்னது?" என்று.

நற்கிள்ளியின் கண்கள் சலனத்தைக் காட்டின. "யார் சொல்ல வேண்டும்? நான் உங்களுக்கு ஒரே மகன்..." என்ற நற்கிள்ளியின் சொற்களை, "நீ என் மகனல்லன் என்று முன்னமேயே சொன்னேன்," என்று பாதியில் வெட்டினான் இத்தன்.

"அப்படியானால்...?" நற்கிள்ளியின் குரல் நடுங்கியது.

"நீ நாடு கடத்தப்பட்டாய். நாளைக்குப் பிறகு உறையூரில் நீ தலை காட்டினால், உன் தலை கொய்யப்படும். ஒரு கோழையை மகனாகத் தினம் காண்பதைவிடக் காணாதிருத்தல் நன்று," என்ற மன்னன், அவ்விடத்தைவிட்டு வேகமாக அகன்றான். தோழியரும் பறந்தனர்- அச்செய்தியைப் பட்டத்தரசியிடம் சொல்ல.

அரண்மனை உப்பரிகைக் கூடத்தில் தனியே நின்ற போர்வை கோப்பெரு நற்கிள்ளி சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் இதழ்களில் புன்னகை அரும்பிற்று. அவன் அழகிய கண்களும் சிரித்தன. போர்வையை நன்றாகப் போர்த்திக் கொண்டு அவன் அரண்மனையை அடுத்திருந்த புறக்காட்டை நோக்கிச் சென்றான்.

காட்டுக்குள் புகுந்து சிறிது தூரம் நடந்ததும் தூரத்தே தெரிந்த ஒரு விளக்கை நோக்கிச் சென்று அங்கிருந்த சிறு வீட்டின் கதவைத் தட்டினான் மும்முறை! கதவைத் திறந்து தலையை வெளியே நீட்டினான் பிரும்மாண்டமான ஒரு மனிதன். அவன் உடற்கூறு இரும்பாய் இருந்தது. சதைகள் கெட்டிப்பட்டுக் கிடந்தன. கன்னக் கதுப்புகள் பெரியதாயிருந்தமையால் கண்கள் சிறிதாகத் தெரிந்தன. இளவரசனைக் கண்டதும், "வாருங்கள் உள்ளே," என்று அழைத்துச் சென்றான் வீட்டிற்குள். கூடத்தை அடைந்ததும் கேட்டான், "எங்கே வந்தீர்கள் இங்கே?" என்று.

"நல்ல சேதி சொல்ல வந்தேன்," என்றான் நற்கிள்ளி.

"என்ன சேதி இளவரசே?"

"என் தந்தை என்னை நாடு கடத்திவிட்டார்."

இதைக் கேட்ட அந்த மனிதன் சிறிதும் பதற வில்லை. பெருமூச்சு மட்டும் விட்டான். "நீங்கள் நினைத்தது நடந்து விட்டது," என்று வினவினான் அந்த மனிதன்.

"ஆம்," என்றான் நற்கிள்ளி மகிழ்ச்சியுடன்.



"இது சரியல்ல இளவரசே!" என்றான் அந்த மனிதன்.

"பெருஞ்சாத்தனாரே? என் ஆசானான நீருமா இதை ஏற்க மறுக்கிறீர்? என் ஆசையை ஏன் தடை செய்கிறீர்?" என்று கேட்டான் நற்கிள்ளி.

"நீங்கள் உறையூரை விட்டுப் போவதால்...?" என்று பெருஞ்சாத்தன் வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

"ஒரு கோழையை உறையூர் இழக்கிறது!"

"ஆனால் உலகம் ஒரு..."

"நிறுத்துங்கள் சாத்தனாரே! காலம் புதிரை அவிழ்க்கட்டும். நான் வருகிறேன்," என்று நற்கிள்ளி ஆசானை வணங்கி விடைபெற்று வெளியே சென்றான்.

முக்காவல் நாட்டின் சிறப்புற்ற சிற்றூரான ஆமூருக்கு ஆண்டுதோறும் ஓர் அதிர்ஷ்டமுண்டு. அந்த ஊர் முருகவேள் கோட்டத்தின் பெருந்திரு நாளன்று அந்த நாட்டின் பல பகுதிகளிலிருந்து வணிகரும் வீரரும் கூடி முருகவேளைத் தொழுது, அடுத்து வரும் ஆண்டைப் பயனுற்றதாகச் செய்து கொள்ளும் வழக்கம் இருந்ததால், பெருங்கோழியூர் நாயகன் என்ற வீரர் பெருமானும் தனது நெடு நாளைய குறையொன்றைப் போக்கிக் கொள்ள, தனது மகள் நக்கண்ணையுடன் ஆமூருக்கு வெளியே யுள்ள தோப்பு வீட்டில் தங்கியிருந்தான்.

பெருந் திருநாளின் மாலைப் பூசை நடந்ததும் குறி சொல்லும் பூசாரி கர்ப்பக்கிரகத்தை அடுத்த மண்டபத்தில் குழுமியிருந்த கூட்டத்தைக் கற்பூரத்

தட்டுடன் அணுகிக் கூட்டத்தின் மீது கண்களை ஓடவிட்டான் ஒரு விநாடி. பிறகு தூரத்தே தோழியருடன் ஒரு தூணுக்கருகில் நின்று கொண்டிருந்த நக்கண்ணையைக் கைகாட்டி அழைத்து, "பெண்ணே! முருகவேள் அருள் உனக்குக் கிட்டிவிட்டது. இன்னும் பத்து நாள் இங்கேயேயிருந்து கோட்டக் குளத்தில் நீராடி அவனடி வணங்கு. பத்தாவது நாள் உன்னை மணப்பவன் உன் இல்லம் தேடி வருவான்," என்று கூறித் தட்டை நீட்டினான். நக்கண்ணையும் தட்டிலிருந்த விபூதியையும் குங்குமத்தையும் எடுத்து நெற்றியில் தீட்டிக் கொண்டாள். பிறகு தோழியருடன் தோப்பு வீட்டுக்குத் திரும்பினாள்.

கோட்டத்தில் நடந்ததைத் தோழியர் எடுத்துக் கூற பெருங்கோழியூர் நாயகன் இறும்பூது எய்தி, முருகவேளை மனத்துள் துதித்தான். 'என் குறை தீர்ந்தது அப்பனே' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, பெண்ணின் தலையைக் கோதிவிட்டு, "நக்கண்ணை! உன் புலமைக்கேற்ற புருஷன் நிச்சயம் கிடைப்பான்," என்றும் ஆறுதல் கூறினான் அவளுக்கு.

நக்கண்ணை தனது நளினமான அழகிய விழிகளை நிலத்தில் ஓட்டினாள். "போன கோட்டங்கள் கணக்கில்லை. செய்த வழிபாடுகள் குறைவில்லை. இரண்டு ஆண்டுகளாக நடக்காதது இப்பொழுது எங்கே நடக்கப் போகிறது?" என்று நினைத்தாள் நக்கண்ணை. இருப்பினும் தந்தையிடம் பதில் பேசாது இடை துவள, அழகு நடை நடந்து உள்ளே சென்றாள்.



ஆனால் பூசாரி சொன்னதுபோல் அடுத்த நாளும் அதற்கு அடுத்த நாளும் முருகவேளின் கோட்டத்திற்குச் சென்றாள். வாவியில் நீராடினாள். அங்கிருந்த செங்கழுநீர்ப் பூவைப் பறித்துத் தலையில் சூட்டிக் கொண்டு சந்நிதானம் சென்று வழிபாடு செய்தாள்.

எட்டு நாட்கள் இப்படி ஓடியும் பலனேதுமில்லையென்றாலும், தந்தையைத் திருப்தி செய்ய விரதத்தை விடாமல் தொடர்ந்து செய்து கொண்டு வந்தாள். ஒன்பதாம் நாள் ஒரு விதமாக வழி பிறந்தது. ஆனால் அது நல்வழியல்ல.

அன்று காலை வழக்கம்போல் வாவியில் நீராடி, கரையில் தோழியர், தன்னைச் சுற்றித் திரை போல் பிடித்த பட்டாடைக்குள் ஈர ஆடையைக் களைந்து புத்தாடைச் சுற்றி கச்சு அணிந்து, தலையில் செங்கழுநீர் மலர் சூடி, வாவிப்படிகளில் ஏறினாள். அங்கு ஒரு மனிதன், அவனை ஏற இறங்க தீ விழிகொண்டு நோக்கினாள் நக்கண்ணை. "யார் நீங்கள்?" என்றும் வினவினாள்.

"ஊரில் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்?" என்ற அவன் பதிலில் தற்பெருமையும் இருந்தது.

"அத்தனை போக்கிரியா நீ?" இம்முறை மரியாதையைக் கைவிட்டுக் கேட்டாள் நக்கண்ணை.

"போக்கிரியா!" வியப்பிருந்தது அவன் கேள்வியில்.

"பெண்களை வழிமறிக்கும் ஆடவருக்குப் பெயர் வேறு ஏதாவது இருக்கிறதா?"

"எதற்கும் ஒரு விலக்கு உண்டு."

“இது அப்படி ஒரு விலக்கு?”

“ஆம். உன் அழகு ஆமூர் மல்லனையும் இவ் வழிக்கு இழுத்தது.”

“இவ்வூர்ப் பெருமல்லரா நீங்கள்?”

“ஆம்.” இதைப் பெருமையாகச் சொன்னான் மல்லன். அத்துடன் விடவில்லை அவன். “உனக்கு மணாளனைத் தேட இரண்டு ஆண்டுகளாக உன் தந்தை முயலுவதாகக் கேள்வி. அந்தக் கஷ்டம் இனி இல்லையென்று அவரிடம் சொல். உன்னைப் பெண் கேட்க இன்று மாலை வருகிறேன்,” என்று கூறி வழியினின்று விலகினான்.

அன்று பெரும் சீற்றத்துடன் முருகவேளை நோக்கினாள் நக்கண்ணை; ‘இவன்தான் நீ தரும் மணாளனா’ என்றும் வினவினாள் மனத்துள்.

முருகவேளின் வதனத்தில் புன்சிரிப்பு இருந்தது; கண்களில் அருள் இருந்தது. அந்தச் சிலை அவளுக்குப் பதில் சொல்லவில்லைதான். ஆனால் அவனுக்குப் பேச்செதற்கு? விழிகள் போதுமே!

இதை உணராத நக்கண்ணை ஆத்திரத்துடன் வீட்டை எய்தினாள். தந்தையிடம் நடந்ததைச் சொன்னாள். பெருங்கோழியூர் நாயகன் மனம் எரிமலையாயிருந்தது. அன்று மாலை ஆமூர் மல்லன் வந்தபோது வாயிலிலேயே நின்று விடை பகர்ந்தான், “வல்லூறு புறாவை மணக்க முடியாது,” என்று.

“நாயக்கரே! ஆமூர் மல்லனை அவமதிப்பவர் செய்ய வேண்டிய கடமையொன்றிருக்கிறது,” என்றான் மல்லன்.



“தெரியும். உன்னுடன் மற்போர் புரிய வேண்டும்,” என்றான் நாயகன்.

“ஆம். நீயோ, உன்னிடமுள்ள மல்லரோ இன்றிலிருந்து மூன்றாவது நாள் ஆமூர் மற்போர் கூடத்துக்கு வாருங்கள்,” என்று கூறிவிட்டு அகன்றான் மல்லன்.

இதைக் கேட்ட நாயகன், “தன் உயிர் இன்னும் இரண்டு நாட்கள் தான்,” என்று தீர்மானித்துக் கொண்டான். ஆமூர் மல்லன் கிழித்தெறிந்த உடல்கள் பல என்பதை அறிந்த நக்கண்ணை அன்று முழுவதும் உறங்கவில்லை.

பத்தாவது நாளும் பிறந்தது. தோப்பு வீடு துன்பத்தில் ஆழ்ந்து கிடந்தது. அன்றும் முருகவேள் கோட்டத்திற்குக் கிளம்பிய நக்கண்ணை வெறுப்புடனேயே கிளம்பினாள். தமிழ்ப் புலமையை அன்று முருகவேளிடமே காட்டி இகழ்ச்சியாகப் பா பாடினாள் உள்ளூர முருகன் முகத்தில் அதைக் கேட்டும் முறுவலிருந்தது. அன்று கடைசித் தினமாதலால் மாலையிலும் கோட்டம் வந்து விரதம் முடித்துத் தோழியருடன் வீடு திரும்பினாள்.

வீட்டின் திண்ணையில் தூணுக்கருகில் முக்காடிட்டு ஒரு உருவம் பதுங்கியிருந்தது. உடல் முழுவதும் பட்டுப் புடைவை மூடிக் கிடந்தது. “யார்?” என்று வினவினாள் நக்கண்ணை. பதில் கிடைக்காததால் பக்கத்திலிருந்த ஒரு மரக்கிளையில் சிறிது உடைத்து அதன் உதவி கொண்டு முக்காட்டைத் தூக்கிப் பார்த்தாள். கரிய இரு விழிகள் அவளை நோக்கின! முகம் சந்திர பிம்பமாயிருந்தது. அது

ஆடவன் என்பதற்கு ஒரே ஒரு அறிகுறி, உதட்டின் மீது ஆழமாக வளர்ந்திருந்த அரும்பு மீசை.

"எழுந்திரு," என்று அதட்டினாள் நக்கண்ணை.

எழுந்திருந்தான் முக்காட்டுக் காளை. அவன் இடையில் ஒரு வாளும் இருந்ததை அவள் கண்டாள். அவன் எழுந்ததில் ஒரு கம்பீரமும் இருந்தது அவளுக்குப் புலனாயிற்று. "யார் நீ?" என்று மீண்டும் வினவினாள் நக்கண்ணை.

அவளுடைய அழகிய விழிகளுடன் அந்த வாலிபன் தனது கண்களைக் கலந்தான் ஒரு விநாடி. அந்த விநாடியில் அந்தப் பார்வை மூலம் அவன் தன்னுள் புகுந்து விட்டானென்பதை உணர்ந்த நக்கண்ணை நாணமெய்தினாள். "தோழி! அவர் யாரென்று கேள்" என்று இம்முறை தோழியை ஏவினாள்.

தோழி திகைத்தாள். என்றும் யாரிடமும் நேராகப் பேசும் நக்கண்ணை, அன்று தன்னைப் பேச ஏவியது திகைப்பாகவும் இருந்தது, வியப்பாகவும் இருந்தது அவளுக்கு. இருப்பினும் திகைப்பையும் வியப்பையும் உதறிக் கேட்டாள்: "யார் நீ?" என்று.

"கோழைச் சோழன்" என்று பதில் கூறினான் அவன்.

"கோழைச் சோழனா!" வியப்புடன் வினவினாள் தோழி.

"ஆம். நான் பட்டாடைப் போர்வையுடன் முக்காட்டிருக்கவில்லையா?" என்று வினவினான் அவன்.

"இருந்தாய்!"



"அப்படிப்பட்டவன் தென் புலத்தில் ஒருவன் தானுண்டு. அவன்..."

"போர்வை கோப்பெரு நற்கிள்ளி" என்று இடை புகுந்து வாசகத்தை முடித்த நக்கண்ணை அதிர்ச்சி வசப்பட்டாள். "சோழ இளவல் இங்கு ஏன் வந்தார்?" என்று வினவினாள்.

"நாடு கடத்தப்பட்டேன்," என்றான் இளவல்.

"கேள்விப்பட்டோம்," என்றாள் நக்கண்ணை.

"கோழைத்தனத்திற்காக!" என்று சொன்னான் இளவல்.

நக்கண்ணையின் மனம் குழம்பியது. அவன் முகம் கோழையின் முகமாகத் தெரியவில்லை அவளுக்கு. கண்களும் கோழையின் கண்களல்ல என்பது அவள் புலமை உள்ளத்திற்குப் புலனாயிற்று, "ஆகவே உள்ளே வாருங்கள்" என்று அழைத்துச் சென்றாள்.

உள்ளே, பெருங்கோழியூர் நாயகன் சோழ இளவலைத் தகுந்த மரியாதையுடன் எதிர்கொண்டான். மஞ்சத்தில் உட்கார வைத்து எதிரில் நின்று கொண்டான். "என்ன ஆணை?" என்றும் கேட்டான்.

"நாயகரே! ஒரு உதவி வேண்டும்" என்றான் சோழ இளவல்.

"உத்தரவிடுங்கள்."

"நாளைக் காலையில் நீர் ஆமூர் மல்லனிடம் செல்லுங்கள்."

"உம்."

"சென்று நான் அவனுடன் மற்போர் புரிய விரும்புவதாகச் சொல்லுங்கள்."

இதைக்கேட்ட நாயகன் திகிலடைந்தான். "இளவரசே வேண்டாம்- இது வேண்டா," என்றான்.

"ஏன்?"

"அவன் உங்களைக் கிழித்துப் போட்டுவிடுவான்."

"நாயகரே..."

"இளவரசே?"

"வீரர்கள் போரில் மரிப்பது நல்லதா, கோழையாக வாழ்வது நல்லதா?"

இதற்கு நாயகன் பதில் சொல்லவில்லை. "ஏன் மரிக்க இஷ்டப்படுகிறீர்கள்?" என்று முடிவில் கேட்டான்.

"நற்கண்ணையின் நளின விழிகளுக்காக, அவளை நேற்று வாவிக்கரையில் அவமதித்தான் மல்லன்."

"ஆம், என்னையும் போருக்கு அழைத்தான்."

"உங்களுக்குப் பதில் நான் செல்கிறேன்!" நற்கிள்ளியின் பதில் உறுதியாயிருந்தது.

இந்த விநோதத்தைக் கேட்டு மறுநாள் ஆமூரே நகைத்தது. "போர்வை கோப்பெரு நற்கிள்ளி மாள ஆமூருக்கா வரவேண்டும்!" என்று ஊர்ப் பெரியவர்கள் சிரித்தார்கள். பெண்கள்கூட நகைத்தார்கள். "இந்த மற்போர் நடைபெறாது. சமயத்தில் நற்கிள்ளி ஓடி விடுவான்" என்று பலரும் சொன்னார்கள்.

ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் போர்வையைப் போர்த்துக் கொண்டு ஊர் மத்தியிலிருந்த மற்போர் கூடத்துக்கு வந்து சேர்ந்தான் நற்கிள்ளி. மக்கள் அவனை வியப்புடன் பார்த்தார்கள். ஆமூர் மல்லன் எல்லோரும் கேட்கக் கூவினான். "ஐயோ சோழன்



மகனே! விதி உன்னைப் பிடரி பிடித்து உந்த இங்கு வந்தனை. வேண்டுமானால் ஓடிவிடு" என்று.

பெருநற்கிள்ளி மெள்ளப் போர்வையை எடுத்தெறிந்தான்- தனது உடலின் மீதிருந்து. உள்ளே சல்லடம் மட்டுமே தரித்திருந்த அவன் தேக காந்த இளமை, விழிகளிலிருந்த அசட்டை இவற்றைக் கண்டு மக்கள், "இந்த வயதில் இவனுக்கு ஏன் இந்த விதி?" என்று கேட்டார்கள்.

சிலர் பெருங்கோழியூர் நாயகனைத் தூற்றினர். "இந்தச் சிறுபிள்ளையை இவன் ஏன் காவு கொடுக்கிறான்?" என்று. இவையனைத்தும் சற்று எட்ட இருந்த பனை மரத்தில் சாய்ந்திருந்த நக்கண்ணையின் காதில் விழ, அவள் தனது நளின நயனங்கள் பனிப்ப நின்றாள்.

ஆனால் மற்போர் துவங்கியதும் விழிகளைத் துடைத்துக் கொண்டாள். வேதனையிருந்த இடத்தை வியப்பு ஆட்கொண்டது. ஆமூர் மல்லன் மும்முறை இளவலைப் பிடித்தான் தனது முரட்டுப் பிடியில். மும்முறையும் மிக லாவகமாக நழுவினான் நற்கிள்ளி. நான்காம் முறை இருவரும் அணுகிய போது பிடித்தவன் ஆமூர் மல்லன். நற்கிள்ளியின் மெல்லிய கைகள் மல்லன் கரங்களைப் புதுப்பாணியில் சுழற்றி மடக்கிப் பிடித்தன. திடீரென அக்கைகள் திரும்பிய வேகத்தில் மல்லன் இருமுறை சுழன்றான்.

இந்தப் புதுப்பிடியைக் கண்டிராத மல்லன் இதயத்தில் சந்தேகம் எழுந்தது. 'இவன் உண்மையில் கோழைதானா? சோழன் மகன்தானா?' என்ற கேள்விகள் சித்தத்தில் பிறந்தன. ஆகவே தனது

வலிமையெல்லாம் உபயோகிக்க நெருங்கினான் இளவலை. இளவலும் தயாராக நின்றான். இம்முறை காலுதைப்பில் ஈடுபட்டான் மல்லன். அதை எதிர் பார்த்த நற்கிள்ளி சற்று விலகித் தனது காலால் அவன் கணுக்காலுக்கு மேல் உதைக்க, மல்லன் மண்ணில் புரண்டான். அடுத்த விநாடி யானை மீது பாயும் சிங்கம் போலப் பாய்ந்த இளவரசன், மல்லன் மார்பில் தன் காலை ஊன்றி, அவன் தலையை எடுத்துப் பிடித்து, "இது உன் மமதைக்கு, இது என் வீரத்துக்கு, இது நக்கண்ணையை வழி மறித்ததற்கு!" என்று மும்முறை தரையில் மோதி விட்டு எழுந்தான். மல்லன் வாயில் ரத்தம் வந்தது. அத்துடன் ஒரு பெருமூச்சு. அவன் உயிரும் பிரிந்தது.

ஆமூர் மக்கள் பிரமை பிடித்து நின்றனர். ஏதும் நடவாதது போல் சல்லடத்துடனும் உடம்பில் புழுதியுடனும் நக்கண்ணை நின்றிருந்த பனை மரத்தை நோக்கி நடந்தான் நற்கிள்ளி. அத்தனை புழுதியுடன் அவளைத் தழுவியும் கொண்டான். நக்கண்ணை மறுக்கவில்லை. நகர் மக்கள் காண அவன் உடற் புழுதிகளை புடைவைத் தலைப்பால் துடைத்தாள்.

மகன் நாடு கடத்தப்பட்ட ஓராண்டுக்குப் பின்னர் பெருஞ்சாத்தன் இல்லத்தை அடைந்த சோழ மன்னன் தித்தன், "பெருஞ் சாத்தனாரே! என் மகன் ஆமூர் மல்லனைக் கொன்றுவிட்டா னாம்" என்றான்.

"ஆம்" என்றார் பெருஞ்சாத்தனார்.



"அப்படியானால் அவனுக்கு மற்போர் கற்றுக் கொடுத்தது யார்?" என்று வினவினான் மன்னன்.

"நான் தான்."

"விற்போரும் தெரியுமா?"

"சகலமும் தெரியும்."

"அப்படியானால் அவன் கோழையல்லவே?"

"சிங்கத்தின் வயிற்றில் நரி எப்படிப் பிறக்கும்?"

பெருஞ்சாத்தனாரின் இக்கேள்வி மன்னனைத் திகைக்க வைத்தது. "பிறகு கோழையாக வேடந்தான் போட்டானா நற்கிள்ளி?" என்று வினவினான்.

"ஆம், உலகத்தைத் தனிப்படப் பார்க்க விரும்பி னார் இளவரசர். ஒரே மகனானதால் நீங்கள் அனு மதிக்க மாட்டீர்களென்று எண்ணினார். ஆகை யால்?"

"நாடகமாடினான்?"

"ஆம்."

"அதற்கும் நீரும் உடந்தை?"

பெருஞ்சாத்தனார் பதில் கூறவில்லை. வாயிலில் எதையோ கண்டு விழித்தார். "என்ன விழிக்கிறீர்?" என்று சீறினான்.

வாயிலைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந் தான் நற்கிள்ளி. "அப்பா! சாத்தனாரிடம் குற்றம் காணாதீர்கள். குற்றம் என்னுடையது," என்றான்.

தித்தன் ஒரு விநாடி தாமதித்தான். பிறகு மைந் தனை அணைத்துக் கொண்டு, "நற்கிள்ளி! இன்று நான் புத்திரப் பேறு பெற்றேன்" என்று கூறிவிட்டு,

"இனி அந்தப்புரம் சென்று விளையாடுவதில்லை என்று உறுதி சொல்" என்று கையை நீட்டினான்.

"அந்த உறுதி சொல்ல முடியாது."

"அப்படியானால்?"

"இப்பொழுதே அந்தப்புரம் போக வேண்டும்."

"காரணம்?"

"இவள்" என்ற இளவல், "இதோ உங்கள் மருமகள்" என்று கூறி வாயிலை நோக்க, நக்கண்ணை அன்ன நடை நடந்து வந்து மன்னனை வணங்கினாள்.

மன்னன் நகைத்தான், "சரி சரி, போ அந்தப்புரத்துக்கு!" என்றான்.

அன்றிரவு மணவறையிலும் நற்கிள்ளி போர்வை போர்த்தி வந்தான். "புடைவையை எடுத்தெறிகிறீர்களா, நான் எறியட்டுமா?" என்றாள் நக்கண்ணை.

"அது உன் தொழிலல்ல, என் தொழில்," என்று சீலையை நீக்கிப் பஞ்சணையை அணுகினான் நற்கிள்ளி.

•

---

இந்தக் கதையின் கரு புறநானூற்றுப் பாடல்கள் 80 இதிலிருந்து 85 வரையும், வித்வான் இராஜகோபலய்யங்கார் எழுதிய "சங்க சிந்தாமணி" என்ற நூலில் இருக்கிறது.

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794